பக்கங்கள்: 12

விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 03 | வள்ளுவர் ஆண்டு 2049 | கார்த்திகை 29 | சனிக்கிழமை 15.12.2018 | கதிர் 40

இனி இது ரகசியம் அல்ல!

நாளை காலை 10 மணிக்கு புதிய பிரதமராக மீண்டும் ரணில் பதவியேற்கின்றார் என்ற தகவல் வெளியானதும் எனது நண்பர் ஒருவர் நேற்றிரவு தொலைபேசி எடுத்தார்.

"அப்படி என்றால் ரணிலுக்கு டபிள் புரொமோஷனா?" என்று என்னிடம் கேட்டார். பக்கம் 02

# அமைச்சரவை மீதான தடையை நீக்க மறுத்தது உயர்நீதிமன்றம்!

## மஹிந்த அணிக்கு நெத்தியடி

கொழும்பு, டிசெ. 15

பிரதமராக மஹிந்த ராஜபக்ஷவும் அவரது அமைச்சரவையும் செயற்படுவதற்குத் தடைவிதித்து மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட இடைக்கால உத்தரவை நீக்குவதற்கு உயர்நீதிமன்றம் நேற்று ஒரேயடியாக மறுப்பு தெரிவித்துவிட்டது.

உயர்நீதிமன்றில் இவ்விடயம் தொடர்பான மேன்முறையீட்டு வழக்கு விசாரணை முடிவடையும் வரை மேன்முறையீட்டு நீதிமன்றம் விடுத்த இடைக்காலத் தடை நீடிக்கும் என்றும் உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.

மஹிந்த ராஜபக்ஷ - அவரது அமைச்சர்கள், பிரதமர் மற்றும் அமைச்சுப் பதவி நிலைப் பணிகளை ஆற்றுவதற்குத் தடை விதித்து மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்டிருந்த இடைக்காலத் தடை உத்தரவுக்கு எதிராக, பக்கம் 11

# இறங்கி வந்தார் மைத்திரி பிரதமர் கதிரையில் ரணில்!

## அமைச்சரவையில் சு.கவினரும்

கொழும்பு, டிசெம்பர் 15

ரணில் விக்கிரமசிங்கவைப் பிரதமராக நியமிக்கவே மாட்டேன் என்று ஒற்றைக் காலில் பிடிவாதம் பிடித்து நின்ற ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடைசியில் இறங்கி வரும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றார்.

ரணில் விக்கிரமசிங்கவை புதிய பிரதமராக நியமித்துப் பதவிப் பிரமாணம் செய்வதற்கு சம்மதம் தெரிவித்துள்ள அவர், புதிய அமைச்சரவையில் தமது சுதந்திரக்கட்சி அமைச்சர்களையும் சேர்த்துக் கொள்வதற்கு இணங்கி வரும்படி ரணில் விக்கிரமசிங்கவையும் கோரியிருக்கின்றார். பக்கம் 11

## 'கை' - 'மொட்டு' மோதல் ஆரம்பம்

### விசேட அறிக்கை விடுத்து சு.க. அதிர்ச்சி வைத்தியம்

கொழும்பு, டிசெ. 15

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவுக்கும் இடையே கருத்து முரண்பாடு ஏற்பட்டுள்ளது. பக்கம் 11

## நிழல் பிரதமர் சம்பந்தன்!

### சீறுகிறது மஹிந்த தரப்பு

கொழும்பு, டிசெ. 15

நிழல் பிரதமராகச் செயற்படும் சம்பந்தனிடம் நாட்டைக் கையளிப்பதற்கு நாம் தயாராக பக்கம் 11

## இன்று பதவி துறக்கிறார் மஹிந்த அமைச்சரவையும் கலைகின்றது

கொழும்பு, டிசெ. 15

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் பிரதமராக நியமிக்கப்பட்ட மஹிந்த ராஜபக்ஷ தனது பதவியை இன்று சனிக்கிழமை இராஜினாமாச் செய்யவுள்ளார். அத்துடன், அடுத்த கட்ட அரசியல் நகர்வுகள் தொடர்பில் விசேட அறிவிப்பொன்றையும் அவர் விடுக்கவுள்ளார்.

இந்தத் தகவலை மஹிந்த ஆதரவு அணி எம்.பியான லக்ஷ்மன் பக்கம் 11

## மைத்திரி இனிமேல் ஹிட்லராக முடியாது

### குமார வெல்கம காட்டம்

கொழும்பு, டிசெ. 15

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இனி ஒருபோதும் நிறைவேற்று அதிகாரத்தை பயன்படுத்தி பக்கம் 11

## ராஜதந்திர அரசியலையே நாம் பின்பற்றுகின்றோம்

### சிறிதரன் எம்.பி. தெரிவிப்பு

கிளிநொச்சி, டிசெ. 15

அரசியல் ரீதியில் இராஜதந்திர அரசியலையே நாம் பின்பற்றுகின்றோம் என தமிழ்த் பக்கம் 11

## மைத்திரி முன் நாளை காலை பிரதமராக ரணில் பதவியேற்பு

### தணிகின்றது அரசியல் நெருக்கடி



கொழும்பு, டிசெ. 15

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் ஜனாதிபதி பக்கம் 02

## மறுத்துவிட்டார் கரு!

கொழும்பு, டிசெ. 15

பிரதமராகுமாறு சபாநாயகர் கரு ஜயசூரியவிடம் தாம் கோரினார் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முக்கியஸ்தர்களை நேற்று வெள்ளிக்கிழமை பக்கம் 02

## பச்சிலைப்பள்ளி பட்ஜெட் தோல்வி!

கிளிநொச்சி, டிசெ. 15

கிளிநொச்சி - பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபையின் வரவு - செலவுத் திட்டம் தோல்வியடைந்த பக்கம் 11

## ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசிலிருந்து வெளியேறவேண்டும்

### ஐ.தே.க. கோரிக்கை

கொழும்பு, டிசெ. 15

உயர்நீதிமன்ற தீர்ப்புக்கு மதிப்பளித்து ஐக்கிய மக்கள் சுதந்திரக் முன்னணி அரசில் இருந்து பக்கம் 11

## சர்வாதிகார நடவடிக்கைகளுக்கு நீதிமன்று அடுத்தடுத்து சூடுவைப்பு

### கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் மகிழ்ச்சி



கொழும்பு, டிசெ. 15

இலங்கையில் கடந்த ஒக்ரோபர் மாதம் 26ஆம் திகதியிலிருந்து அரசமைப்புக்கு முரணாக இடம்பெற்றுவந்த சர்வாதிகார பக்கம் 02

## மஹிந்த பதவி விலகுவதால் எதிர்க்கட்சியில் அமர்வோம்

### கூறுகிறார் லக்ஷ்மன் யாப்பா

கொழும்பு, டிசெ. 15

மஹிந்த பதவியை ராஜினாமா செய்யத் தீர்மானித்துள்ளார். எனவே நாம் எதிர்க்கட்சியில் அமர்ந்துகொண்டு போராட எதிர்பார்க்கின்றோம் என ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன தெரிவித்தார். பக்கம் 11

# கிளிநொச்சியிலும் நேற்று பாலசிங்கத்தின் நினைவு





கிளிநொச்சி, டிசெ. 15

தேசத்தின் குரல் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்தின் நினைவஞ்சலி கிளிநொச்சி அறிவகத்தில் உணர்வெழுச்சியுடன் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம், மூத்த ஊடகவியலாளர் வித்தியாதரன் மற்றும் முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள்,பிரதேச சபைகளின் தவிசாளர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள், தமிழ்த்தேசிய உணர்வாளார்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ஐ)



# 72 மணித்தியாலங்களில் நாடு இயல்பு நிலைக்குத் திரும்பும்

## மனோ கணேசன் நம்பிக்கை

அடுத்த 72 மணித்தியாலங்களுக்குள்நாடுஇயல்புநிலைக்குத் திரும்பும் என நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் நேற்றுநம்பிக்கைவெளியிட்டார்.

அவர் தனது உத்தியோகப் பூர்வ முகப்புத்தகத்தில் பதிவிட்டுள்ள பதிவு ஒன்றிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

நாட்டில் நாளுக்கு நாள் அரசியலில் பல முக்கிய திருப்பங்கள் இடம்பெற்று வரும் நிலையிலேயே அவர் இதனைக் கூறியுள்ளார். (ஐ)

## யாழ். சாயி நிலையத்தில் விசேட ஆன்மீக உரை

இலங்கையில் இடம்பெறும் இளைஞர் மாநாட்டுக்கு விசேட அதிதியாக கலந்து கொள்ளும் சாயி சகோதரர் கிருஷ்ணமூர்த்தி வெங்கடராமன் யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளார்.

சேர். பொன் இராமநாதன் வீதியிலுள்ள சத்திய சாயி சேவா நிலையத்தில் நாளை மறுதினம் திங்கட்கிழமை மாலை 4.30 மணிமுதல் 7மணிவரைஅவர்விசேடஆன்மீக உரை ஆற்றுகின்றார்.

'மகிழ்ச்சிகரமான பெற்றோரியல்', 'நல்ல மனிதனாக மாணவர்கள் மற்றும் இளைஞர்கள்' ஆகிய இரு தலைப்புகளில் அவர் உரை நிகழ்த்தவுள்ளார்.

பெற்றோர், மாணவர்கள், இளைஞர்கள் மற்றும் ஆர்வமுடையோர் அனைவரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டு பயன்பெறுமாறு சாயி நிலையத்தினர் அழைக்கின்றார்.

## மைத்திரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயலகத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் மீண்டும் பிரதமராகப் பதவியேற்கவுள்ளார்.

இந்தத் தகவலை ஐக்கிய தேசிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன உறுதிப்படுத்தினார்.

நாடாளுமன்றத்தைக்கலைத்து ஜனாதிபதிமைத்திரிபாலசிறிசேனவால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் அரசமைப்புக்குமுரணானதுஎன்றுஉயர்நீதிமன்றம்நேற்றுமுன்தினம்மாலை தீர்ப்பளித்தது. அதையடுத்து பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட அமைச்சரவையின் நடவடிக்கைகளைத் தடுக்கும் வகையில்மேன்முறையீட்டுநீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட இடைக்காலத் தடை உத்தரவை நீக்குவதற்கும் உயர்நீதிமன்றம் நேற்று மறுப்புத் தெரிவித்துள்ளது.

உயர்நீதிமன்றத்தின் இந்த அதிரடித் தீர்ப்புகள் மைத்திரி – மஹிந்த கூட்டணியை நிலைகுலையச் செய்துள்ளன.

இந்நிலையில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் கடந்த ஒக்ரோபர் மாதம் 26ஆம் திகதி பிரதமராக நியமிக்கப்பட்ட மஹிந்த ராஜபக்ஷ, தனது பதவியை நாளை சனிக்கிழமை இராஜினாமாச் செய்யவுள்ளார். அவர் தலைமையிலான அமைச்சரவையும் இன்று கலையவுள்ளது.

இதற்கிடையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும், ரணில் விக்கிரமசிங்க தலைமையிலானஐக்கியதேசியமுன்னணியின் பங்காளிக் கட்சிகளின் நாடாளுமன்றஉறுப்பினர்களுக்கும் இடையில் முக்கியத்துவமிக்க சந்திப்புகள் நடைபெற்றன. இதன்போது எட்டப்பட்ட இணக்கப்பாட்டின் அடிப்படையிலேயே, ரணிலுக்கு மீண்டும் பிரதமர் பதவி வழங்கப்படவுள்ளது.

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலத்தைக் கொண்டுள்ள கட்சிக்கே ஆட்சியமைப்பதற்கு ஜனாதிபதி அழைப்பு விடுக்கவேண்டும். அத்துடன், நாடாளுமன்றத்தில் நம்பிக்கையைவென்றநபரைபிரதமராக நியமிக்கவேண்டும். இவற்றை உறுதிப்படுத்தும்வகையில்நாடாளுமன்றத்தில்பெரும்பான்மைப் பலத்தைக் கொண்ட ஐக்கிய தேசியமுன்னணியின்தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு நம்பிக்கை தெரிவிக்கும் தீர்மானம் கடந்த 12ஆம் திகதி சபையில் நிறைவேற்றப்பட்டது.

எனவே, இனியும் இழுத்தடிப்புச் செய்தால் அது பாதகமான விளைவுகளை ஏற்படுத்திவிடும் என்பதாலேயே தனது முடிவை மாற்றி – ரணிலுக்கு வாய்ப்பை வழங்க ஜனாதிபதி மைத்திரி முன் வந்தார் எனக் கூறப்படுகின்றது. (ஐ)

## சர்வாதிகார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கைகளுக்கு உயர்நீதிமன்றம் அடுத்தடுத்து தக்கப் பாடம் புகட்டித் தீர்ப்புகளை வழங்கியுள்ளது. இதனை நாம் வரவேற்கின்றோம். வரலாற்றுச் சிறப்பு மிக்க தீர்ப்புகளினால் பெருமகிழ்வு அடைகின்றோம்.

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

அதிகாரத்தில் இருப்பவர்கள் இனிமேலாவது திருந்தி நாட்டு மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு செயற்பட வேண்டும். நாட்டின்நற்பெயரைக்காப்பாற்ற வேண்டும். இது ஜனநாயக நாடு என்பதை உணர்ந்து அனைவரும் செயற்பட வேண்டும். நிரந்தரத் தீர்வுடன் மூவின மக்களும் ஒற்றுமையாக – நல்லிணக்கத்துடன் வாழும் சூழலை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் – என்று அவர் மேலும் கூறினார்.

உடல்நலக்குறைவால்நேற்று முன்தினம் வியாழக்கிழமை காலை கொழும்பிலுள்ள 'லங்கா' (அப்பலோ) தனியார் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், அங்கிருந்தவாறு இதனைக் கூறினார்.

நாடாளுமன்றத்தைக் கலைத்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் அரசமைப்புக்கு முரணானது என்று உயர்நீதிமன்றம் வியாழக்கிழமை மாலை தீர்ப்பளித்தது. அதையடுத்து பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட அமைச்சரவையின் நடவடிக்கைகளைத் தடுக்கும் வகையில் மேன்முறையீட்டுநீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட இடைக்காலத் தடை உத்தரவைநீக்குவதற்கும்உயர்நீதிமன்றம்நேற்று மாலை மறுப்புத் தெரிவித்தது.

இவை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே இரா.சம்பந்தன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (ஐ)

# டிசெ. 18 நாடாளுமன்று கூடும் மஹிந்த அணியும் பங்கேற்கும்

கொழும்பு, டிசெ. 15

நாடாளுமன்றம் எதிர்வரும் 18 ஆம் திகதி பிற்பகல் ஒருமணிக்கு சபாநாயகர் கருஜயசூரிய தலைமையில் கூடவுள்ளது.

நாட்டில் ஏற்பட்டிருந்த அரசியல் நெருக்கடி , உயர்நீதிமன்ற தீர்ப்புகளையடுத்து இன்னும் 24 மணிநேரத்துக்குள் முடிவுக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதன்படி எதிர்வரும் திங்கட்கிழமைக்குள் புதிய அமைச்சரவை பதவியேற்பதற்குரிய அறிகுறிகள் பிரகாசமாகத் தென்படுகின்றன.

புதிய அரசு அமையபெற்ற பின்னர் 18 ஆம் திகதி கூடும் சபை அமர்வில் மஹிந்த அணி பங்கேற்கவுள்ளது.

நவம்பர் மாதம் 14 ஆம் திகதிக்கு பின்னர் நடைபெற்ற சபை அமர்வுகளை மைத்திரி, மஹிந்த கூட்டணி உறுப்பினர்கள் புறக்கணித்து வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## நூல் வெளியீட்டு விழா

திருச்செல்வம் தவரத்தினம் எழுதிய 'துணிவே துணை – சிறுவர் கதை' நூல்வெளியிட்டுவிழாகாரைநகர்துருத்தித்தீவில்நாளைஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு யாழ்ப்பாணம்அஞ்சல்அதிபர் நிமலதாசன்தலைமையில்நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக காட்டுப்புலம் அ.த.க. பாடசாலை அதிபர் ந.சிவானந்தராசாவும் சிறப்பு விருந்தினராக தேசிய சேமிப்பு வங்கியின் காரைநகர் கிளை முகாமையாளர் நி. மயூரனும், கௌரவ விருந்தினராக யாழ். மாவட்ட கைப்பணி அபிவிருத்திச் சங்கத் தலைவர் சோ.நாதனும் கலந்து கொள்வர்.

நூலின் வெளியீட்டுரையை காரைநகர் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் ச.தனுசன் நிகழ்த்துவார். முதற்பிரதியை ஊடகவியலாளர் வே.செல்வராஜா பெற்றுக் கொள்வார்.

## மறுத்துவிட்டார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாலை சந்தித்து பேசியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது கருத்து வெளியிட்ட அவர், கரு ஜயசூரிய மற்றும் ரணிலை நான் நேற்றிரவு (நேற்று முன் தினம்) சந்தித்தேன். பிரதமர் பதவியை ஏற்கும்படி நான் கருவிடம் கேட்டேன்.

ஆனால் அவர் அதற்குப் பதில் அளிக்கவில்லை. கட்சியுடன் பேசிவிட்டுப் பதில் தருவதாகச் சொன்னார்கள். ஆனால் இன்னமும் பதில் இல்லை. மறுபுறம் நீதிமன்றவழக்குகள்தொடர்வதால் நாங்கள் எப்படி நடந்துகொள்வது என்று கட்சியுடன் பேசித் தீர்மானிக்க வேண்டும்.

மஹிந்த இன்று (நேற்று) காலை என்னைச் சந்தித்து இந்த நெருக்கடி நிலைமை தொடர விட்டு என்னை மேலும் சிக்கலுக்குள்ளாக்க விரும்பவில்லையெனத் தெரிவித்து பதவி விலகுவதாகச் சொன்னார். நாங்கள் வேறல்ல. எதிர்க்கட்சியில்எங்களது கட்சி உட்காரும் – என்றார். (ஐ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனக்கு விளங்கவில்லை. என்ன விடயம் என்று கேட்டேன்.

*"இல்லை. 'ரணிலுக்குப் பிரதமர் பதவி வழங்கவே மாட்டேன்' என்று அடம்பிடித்தவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன. 'என் பதவி பறிபோனாலும் பரவாயில்லை. ரணிலைப் பிரதமராக்க மாட்டேன்.' – என்று சபதம் செய்தவர் அவர். 'ரணிலை மீண்டும் பிரதமராக்கினால் அடுத்த ஒரு மணி நேரத்தில் எனது பதவியை இராஜினாமாச் செய்துவிட்டு மக்களுடன் இறங்கிவீதியில்போராடப் போய்விடுவேன்' என்றும் தனது சுதந்திரக் கட்சி அமைப்பாளர்கள் மத்தியில் சூளுரைத்தவர்.*

*"ஆகவே நாளைக்குப் பிரதமர் பதவியில் ரணிலைச் சத்தியப்பிரமாணம் செய்து அமர அனுமதித்ததுடன் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இராஜினாமாச் செய்துவிட்டுப் போய்விடுவார். நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை ஆதரவைப் பெற்றிருக்கும் ரணிலுக்குத் தான் வெற்றிடமாகும் ஜனாதிபதி பதவியும் கிடைக்கும். அதுதான் அவருக்கு டபிள் புரமோஷனா என்று கேட்டனான்."* – என விளக்கம் தந்தார் அவர்.

எனக்குச் சிரிப்பாக இருந்தது. *'அரசியல்வாதி பேச்சு விழுந்தால் போச்சு'* என்ற கதை எனது நண்பருக்குத் தெரியவில்லையோ என்று ஆதங்கப்பட்டேன் நான்.

*"முதலில் நாளை 10 மணிக்கு ரணில்பதவியேற்கட்டும். அதற்குப் பிறகு பார்க்கலாம். நாளொரு பேச்சு பேசும் மைத்திரி அதற்கிடையில் மனது மாறி ரணிலைப் பிரதமராக்க மாட்டேன் என்று திரும்பவும் முருங்கை மரத்தில் ஏறமாட்டார் என்பது என்ன நிச்சயம்?"* – என்று கூறி நண்பர் வாயை அடைத்தேன் நான்.

*"கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தான் தோற்றிருந்தால் தன்னை ஆறடி சவக்கிடங்கில் அடக்கியிருப்பார்கள் என்று தாறுமாறாக மஹிந்த ராஜபக்ஷவைத் திட்டித் தீர்த்தவர் இதே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனதான். இப்போது மஹிந்த தோளில் கை போட்டுக் கொண்டு, தான் அப்போது அப்படிப் பேசிய பேச்சு, மேடைக்கு ஆற்றிய உரை, அதை சீரியஸாக எடுத்துக் கொள்ளக்கூடாது என்று இப்போது கதை அளப்பவரும் இதே மைத்திரிதான். 'என்வாழ்க்கையில் இனி ரணிலைப் பிரதமராக நியமிக்க மாட்டேன்' என்று நேற்று வரைத்தாம்கூறிக்கொண்டிருந்ததும் கூட அப்படி மேடைக்குப் பேசிய பேச்சுத்தான், அதை சீரியஸாக எடுக்காதீர்கள்' என்று இப்போதும் கூறமாட்டார் என்பது என்ன நிச்சயம்?"* – என்றும் நான் கேட்டு வைத்தேன்.

அவர் ஆமாம் என்று நான் கூறியதை ஒப்புக் கொண்டார். எனதுநண்பரைப்போலஇலங்கை முழுவதும் பல்லாயிரம் பேர் இப்படித் தங்களைத் தாங்களே கேள்வி கேட்டுத் தலையைப் பிய்த்து கொள்கின்றார்கள் என்பதுதான் உண்மை.

வர, வர எனக்கும் ஒரு சந்தேகம் தீவிரமடைந்து வருகின்றது. ஜனாதிபதி மைத்திரி குறித்து பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா நாடாளுமன்றத்தில் கூறிய விடயம் உண்மையாக இருக்குமோ என்பதுதான் அது. வாசகர்களே! உங்களுக்கு அப்படிச் சந்தேகம் வரவில்லையா?

- மின்னல்-

# ரணிலை உடனே பிரதமராக்குங்கள்!

## ஜனாதிபதி மைத்திரியிடம் நஸீர் கோரிக்கை



கொழும்பு, டிசெ. 15

ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்கான கதவுகளைத் திறக்கச் சிறுபான்மை மக்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் கட்சிகள் ஒருங்கிணைந்து செயற்பட்டமைக்குக் கிடைத்த வெற்றியே உயர்நீதிமன்றத் தீர்ப்பாகும். இந்த ஜனநாயக அடிப்படையின் அடையாளமாக மீண்டும் பிரதமராக ரணில் விக்கிரமசிங்க செயற்படுவதற்கு ஜனாதிபதி ஆதரவளிக்க வேண்டும். மீண்டும் ரணில் பிரதமரானவுடன் முதல் நடவடிக்கையாக மாகாண சபைகளுக்கான தேர் தலை நடத்தி அடைக்கப்பட்டிருக்கும் சகல ஜனநாயகக் கதவுகளையும் திறக்க முன்வரவேண்டும்.

– இவ்வாறு கோரியுள்ளார் கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் நஸீர் அஹமட்.

நாடாளுமன்றக் கலைப்புக்கு எதிராக நேற்று முன் தினம் வெளியான உயர்நீதி மன்றத் தீர்ப்பைத் தொடர்ந்து அவர் விடுத்துள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: –

அரசமைப்பின் சட்ட ஏற்பாடுகளுக்கு அமைய நான்கரை ஆண்டுகள் செல்லும் வரை நாடாளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு இல்லை என்பதை உயர்நீதிமன்றம் உறுதிசெய்து தீர்ப்பளித்துள்ளது. அதனூடாக ஜனநாயகம் நிலைநிறுத்தப்படுவதற்கான சூழல் உருவாகியிருக்கின்றது. இத்தகைய சூழலில் மீண்டும் பிரதமராகப் பணி ஏற்கும் பட்சத்தில் ரணில் விக்கிரமசிங்க தமது முதற்பணியாகக் கலைக்கப்பட்டு – ஜனநாயக ரீதியாக முடக்கப் பட்டிருக்கும் மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்த நடவடிக்கை எடுக்க வேண் டும்.

கடந்த காலங்களில் பழைய தேர்தல் முறையூடாக மாகாண சபைத் தேர்தல்களை நடத்தக்கூடிய அதிகாரம் பிரதமருக்கு இருந்தது. அதனை அவர் தமது அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் மேற்கொண்டிருக்க முடியும். எனினும், ரணில் விக்கிரமசிங்க அதனைச் செய்யத் தவறியிருந்தார். இதன் காரணமாகச் சிறுபான்மை மக்கள் தமது ஜனநாயக ரீதியான நடவடிக்கைகளை முன்னெடுக்கும் வாய்ப்புகள் பறிக்கப்பட்டன. ஆளுநர் ஆட்சி ஏற்படுத்தப்பட்டு பாரிய பின்னடைவுகள் ஏற்பட்டுள்ளன. இதனால் ஜனநாயகத்தின் குரல் அறுக்கப்பட்டுள்ளது என்றுகூடச் சொல்ல முடியும்.

இக்காலத்தில் அவரால் நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட பிரேரணையையும் நாம் புறந்தள்ளிவிட முடியாது. அதாவது பெண்களுக்கு மாகாண சபைகளில் அதிக பிரதிநிதித்துவம் வேண்டும் என்று திரைமறைவில் தமது அமைச்சரவையில் அவர் அவசரமாக நிறைவேற்றிய அந்தப் பிரேரணையும் கருத்தில் கொள்ள வேண்டும். இதன் தாக்கம் சிறுபான்மை மக்களின் முக்கியமாக முஸ்லிம் மக்களுக்கு அளப்பரிய பாதிப்பை ஏற்படுத்தும் ஒன்றாக இருந்தமையையும் நாம் மறந்துவிட முடியாது.

இத்தகைய நிலையில் அண்மையில் மஹிந்த ராஜபக்ஷ பிரதமராகப் பணி ஏற்றதும் தமது அமைச்சரவையின் ஊடாக அங்கீகாரத்தைப் பெற்று அதனை நடைமுறைப்படுத்த முன்வந்தார் என்பதையும் நாம் கருத்தில்கொள்ள வேண்டும்.

ஜனநாயகத்தை நிலைநிறுத்துவதற்கான சமகாலத்தில் மிகுந்த அர்ப்பணிப்போடு செயற்பட்ட சிறுபான்மையின மக்களின் கட்சிகள் குறிப்பாக முஸ்லிம் கட்சிகள் இந்த விடயத்தில் கூடிய கவனம் கொண்டு புதிதாக அரசை ஏற்கும் தரப்பினருக்குக் கூடிய அழுத்தம் கொடுத்துச் செயற்பட முன்வரவேண்டும்– என்றுள்ளது. (ஐ)

## பெற்ற குழந்தைக்குச் சூடு வைத்த கொடூர தாய் பொலிஸாரால் கைது!

தனது தாயினால் இரும்புக் கரண்டியால் சுடப்பட்ட 4 வயதுடைய குழந்தை ஒன்று கண்டி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள் ளார்.

சம்பவம் தொடர்பில் குறித்த குழந்தையின் தாய் கைது செய்யப்பட்டுள்ளார்.

கண்டி, அலவத்துகொட பகுதியைச் சேர்ந்த 4 வயதுடைய குழந்தை தனது ஆடையில் சிறுநீர் கழித்த காரணத்திற்காக தாய் சூடு வைத்துள்ளார்.

பின்னர் இந்தச்சம்பவம் தொடர்பில் குழந்தையின் தந்தை, அலவத்துகொட பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இதனையடுத்து பொலிஸார் அந்தப் பெண்ணைக் கைதுசெய்துள்ளனர். சம்பவம் தொடர்பில் அலவத்துகொட பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## கரைச்சிப் பிரதேச சபை பட்ஜெட் நிறைவேற்றம்

கரைச்சி பிரதேச சபையின் வரவு – செலவுத் திட்டம் 4 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

கரைச்சிப் பிரதேச சபையின் அமர்வு நேற்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணி யளவில் ஆரம்பமாகியது.

சபையின் தவிசாளர் வேழமாலிகிதன் தலைமையில் இடம்பெற்ற அமர்வில் 2019 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டம் வாசிக்கப்பட்டு வாக்கெடுக்கப்பட்டது.

இதன்போது வரவு – செலவுத் திட்டத்துக்கு ஆதரவாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் 17 பேரும், ஐக்கிய தேசியக் கட்சியின் ஒரு வாக்குமாக 18 வாக்குகள் கிடைத்ததுடன், எதிராக 14 வாக்குகள் கிடைத்தன.

தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, சுயேட்சைச் குழு ஆகியன எதிர்த்து வாக்களித்ததுடன், ஈ.பி.டி.பி. நடுநிலை வகித்தது.

இதேவேளை, நேற்றைய அமர்வில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கலந்து கொண்டிருக்கவில்லை என்பது குறிப்பிடதக்கது. (ஐ)

## தீவுப்பகுதிப் படகுச் சேவைகள்; ஆளுநர் தலைமையில் ஆராய்வு



யாழ்ப்பாணம், டிசெ. 15

தீவுகளுக்கான பயணிகள் படகுச் சேவைகளில் ஈடுபடும் படகுகளின் தரம் மற்றும் கடல் போக்குவரத்துக்கான தகுதிச் சான்றிதழ்களை வழங்குவதற்கு ஏற்ற நடவடிக்கைகளை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு வடக்கு ஆளுநர் பணிப்புரை விடுத்துள்ளார்.

எழுவைதீவு, அனலை தீவு உள்ளிட்ட தீவுகளுக்கு இடையில் போக்குவரத்தில் ஈடுபட்டுவந்த எழுதாரகை படகின் சேவைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளமை சம்பந்தமாக ஆராயும் விசேட கூட்டம் ஆளுநர் அலுவலகத்தில் நேற்று முன் தினம் வியாழக்கிழமை மாலை நடைபெற்றது.

இங்கு கருத்து தெரிவித்த உள்ளூராட்சி ஆணையாளர் பற்றிக் டிறஞ்சன், எழுதாரகை படகைப் பராமரிப்புச் செய்வதற்குப் போதுமான வருமானம் கிடைக்கவில்லை. அதற்காகப் பல இலட்சம் ரூபாவை வருமானத்திற்கு மீறிச் செலவு செய்கின்றோம். அதனால்அதன்சேவையைத்தொடர்ந்து மேற்கொள்வதற்கு இயலாமை ஏற்பட்டுள்ளது. இதற்கு மாற்று வழி ஒன்றை ஏற்படுத்தவேண்டும் என ஆளுநரிடம் தெரிவித்தார்.

நெடுந்தாரகை, வடதாரகை சேவையில் ஈடுபடுத்துவதைப்போன்று எழுதாரகையையும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை ஊடாகச் சேவையில் ஈடுபடுத்த முடியும் அல்லது ஊர்காவற்றுறை பிரதேச சபையிடம் கையளித்து மாகாணசபையின் வருடாந்த வரவு – செலவுத் திட்டத்தின் மூலம் நிதியை ஒதுக்கீடு செய்து சேவையில் ஈடுபடுத்த முடியும். அதுவும் கைகூடாது போனால் தனியார் நிறுவனங்கள் ஊடாக இந்தச் சேவையைச் செய்ய முடியும் என இதன்போது ஆலோசனை ஒன்றும் முன்வைக்கப்பட்டுள்ளது.

இவைகள் அனைத்தையும் செவிமடுத்த ஆளுநர், தீவகத்தில் பயணிகள் சேவையில் ஈடுபடும் படகுகளின் எண்ணிக்கை, கட்டணம் உள்ளிட்ட விடயங்கள் அடங்கிய அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்குமாறும் அவற்றில் சட்ட ரீதியாகக் காப்புறுதி செலுத்தப்பட்டு அனுமதியுடன் சேவையில் ஈடுபடும் படகுகளின் விவரங்களையும் கட்டணங்களையும் தெரிவிக்குமாறும் பணித்துள்ளார்.

(ஐ)

### திருவெம்பாவையை முன்னிட்டு

## ஈழத்துச்சிதம்பரம் நோக்கி நாளை ஆன்மீக பாதயாத்திரை

யாழ்ப்பாணம், டிசெ.15

திருவெம்பாவையை முன்னிட்டு அகில இலங்கை சைவ மகா சபையின் ஏற்பாட்டில் ஆன்மீக பாதயாத்திரை நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு சம்பில்துறை சம்புநாத ஈஸ்வரர் ஆலயத்தில் இருந்து காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் வரை இடம்பெறும் என்று அறிவிக்கப்படுகிறது.

பாதயாத்திரை சம்பில்துறை சம்புநாத ஈச்சரத்தில் இருந்து ஆரம்பமாகி பனிப்புலம், சுழிபுரம், மூளாய், வதிரிப்புலோ, வலந்தை, கிழவன்காடு முருகன் ஆலயம் ஊடாக காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தைச் சென்றடையும்.

பாத யாத்திரை செல்லும் வீதிகளைத் துப்புரவு செய்து மாவிலை, தோரணங்கள் கட்டி அலங்காரம் செய்து யாத்திரையில் கலந்து கொள்ளுமாறும் சைவ மகா சபையினர் கேட்டுக் கொண்டுள்ளனர்.


வாடிக்கையாளருக்கு ஓர் நற்செய்தி

யாழ். நகரில் முதல் முறையாக அனைத்து வாடிக்கையாளரதும் தேவை கருதி இன்றிலிருந்து எமது நிறுவனம் 24 மணித்தியால சேவையை வழங்குவதுடன் இன்றிலிருந்து 3 நாட்களுக்கு ரூபாய் 3000/= இற்கு மேல் கொள்வனவு செய்பவர்களுக்கு 10% விலைக்கழிவும், ரூபாய் 5000/= இற்கு மேல் கொள்வனவு செய்பவர்களுக்கு 10% விலைக்கழிவுடன் எமது நிறுவனத்தில் இருந்து 6km சுற்றளவுக்குள் வசிப்பவர்களுக்கு கொள்வனவு செய்யும் பொருள்கள் இலவசமாக விநியோகிக்கப்படும்.

முக்கிய குறிப்பு : தொலைபேசியூடாகவும் பொருள்கள் ஓடர் செய்யலாம்.
(நிபந்தனைகளுக்கு உட்பட்டது : அங்கர், சீனி, மா தவிர்ந்த பொருள்கள்)

SUNJEYS A to Z SUPER MART
100, Arasady Road. Jaffna.
(இந்து மகளிர் கல்லூரிக்கு அருகில்)
021 205 3077

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## நீதித்துறையின் நிலைமை

இலங்கையின் நீதித்துறை தனது பக்கச் சார்பின்மையையும் தனித்துவத்தையும் மீண்டும் ஒரு தடவை நிரூபிக்கும் வகையில் செயற்பட்டிருக்கின்றது.

தற்போதைய அரசியல் நெருக்கடிகளுக்கு மத்தியில் நேர்சீராகவும், காலதாமதம் காட்டாமலும், சுயாதீனமாகவும், உறுதியாகவும் செயற்பட்டமை மூலம் சர்வதேச மட்டத்திலும் இலங்கையின் நீதித்துறை மெச்சப்படத்தக்கதாகவும் கருமாற்றியிருக்கின்றது என்பது மறுக்கப்பட முடியாத உண்மைதான்.

*"கால தாமதமான நீதி மறுக்கப்பட்ட நீதியாகிவிடும்."* என்பார்கள். அதனைப் புரிந்து கொண்டு, வீண் கால தாமதங்கள், இழுபறிகளுக்கு இடமளிக்காமல் இலங்கையின் உயர்நீதிமன்றமும், மேன்முறையீட்டு நீதிமன்றமும் துணிச்சலுடன் செயற்பட்டிருக்கின்றன.

*"நீதி நிலை நாட்டப்படுவது மட்டுமல்லாமல், நிலை நாட்டப்படுகின்றமை போல காட்டப்படவும் வேண்டும்."* – என்றும் சொல்லுவார்கள்.

அரசமைப்பை மீறி நாடாளுமன்றைக் கலைக்கும் நடவடிக்கையை முன்னெடுத்த நாட்டின் முதல் பிரஜைக்கே – நிறைவேற்று அதிகார ஜனாதிபதிக்கே – அவரின் நடவடிக்கை தொடர்பில் கனகச்சிதமாக சூடு வைத்திருக்கின்றது உயர்நீதிமன்றம்.

ஜனாதிபதி முன்னெடுத்த நடவடிக்கை அப்பட்டமான அரசமைப்பு மீறல் என்பதை உயர்நீதிமன்றத்தின் முழு ஆயமுமே – ஏழு நீதியரசர்களுமே – ஒன்று சேர்ந்து தீர்ப்பளித்தமையானது அத்துமீறும் நிறைவேற்று அதிகாரத்தைக் கட்டுப்படுத்தி, வழிப்படுத்தும் ஒரு சவுக்கடிதான்.

அதுபோலவே, நாடாளுமன்றத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணை நிறைவேற்றப்பட்டதன் மூலம் தகுதி இழந்த பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் அரசு அதிகாரத்தில் தொடர்வதற்குத் தடை விதித்து இடைக்கால உத்தரவு பிறப்பித்த மேன்முறையீட்டு நீதிமன்றமும் –

இந்த இடைக்கால உத்தரவுக்கு எதிராகச் செய்யப்பட்ட மேன்முறையீடு தொடர்பில் மனுதாரரான மஹிந்த ராஜபக்ஷ முன்வைத்த வேண்டுகோளை ஏற்க மறுத்தமையுடன், அது தொடர்பில் இடைக்கால நிவாரணம் எதையும் தர வாய்ப்பே இல்லை என்று கைவிரித்ததன் மூலம் மீளவும் உயர்நீதிமன்றமும் –

துணிச்சலுடன் நீதியை நிலைநாட்டியிருக்கின்றன என்றே கூற வேண்டும்

நீதிமன்றங்களின் இந்த அசைக்க முடியாத – நீதியை நிலை நாட்டுகின்ற – உறுதிப்பாடே இறுதியில் மஹிந்த ராஜபக்ஷவையும் தமது பிரதமர் பதவியை ராஜனாமாச் செய்து விட்டு பதவி விலகும் முடிவுக்குத் தள்ளியிருக்கின்றது என்று கருதலாம்.

தற்போதைய கொழும்பு அரசியல் நெருக்கடி தொடர்பான விடயங்களில் ஹல்ஸ்டோர்ப்பில் உள்ள கொழும்பு நீதிமன்றங்களின் செயற்பாடுகள் மெச்சப்பட்டாலும் கூட, தமிழர்களைப் பொறுத்தவரை இந்த நீதிமன்றங்கள் தொடர்பில் பின்னடிப்பான எண்ணப்பாடு இன்னமும் நீடிக்கவே செய்கின்றது.

இதையே, வழமையாகவே வெளிப்படையாகப் பேசும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர் இரட்ணஜீவன் கூலும் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

*"இன அடிப்படையில் அணுகப்படாத வழக்குகளில் இலங்கையின் நீதித்துறை சரியான தீர்ப்பை வழங்கி வருகின்றது."* – என்று அப்பட்டமாகவே சுட்டிக் காட்டுகின்றார் அவர்.

*"இலங்கையில் இனவாதம் சகல தரப்புகளிலும் பெரிய அளவில் நிரம்பியுள்ளது. இந்த வழக்கில் சகல சமூகங்களினதும் – இனங்களிலும் – உரிமைகளும் கேள்விக்கு உட்படுத்தப்பட்டிருந்தது. ஆகவே இந்தத் தீர்ப்பில் – இந்த வழக்குகளில் – இனவாதக் கருத்துகள் எடுபடவில்லை. இதுவே நீதியான தீர்ப்புக்குக் காரணம்."* – என்று சுட்டிக் காட்டும் ஜீவன் கூல் மற்றொரு முக்கிய அம்சத்தையும் போட்டு உடைத்திருக்கின்றார்.

இப்படி, தென்னிலங்கை அரசியல் விவகாரத்தில் துணிச்சலாகவும், நீதியாகவும், பக்கம் சாராமலும் செயற்படும் தகைமை பெற்ற இலங்கையின் நீதித்துறை, தமிழருக்கு எதிரான இன அழிப்பு விடயத்தில் நீதி செய்யும் என எதிர்பார்ப்பது சந்தேகத்துக்கு உரியதே என்ற சாரப்பட கருத்துப் பிரதிபலிக்கின்றார் அவர்.

*"இன அடிப்படையில் அணுகப்படாத வழக்குகளைப் பொறுத்தமட்டில் இலங்கையின் நீதித்துறை நிச்சயமாக பலமாகவும், நீதியாகவும் உள்ளது."* – என்ற அவரது கருத்து இலங்கையின் நீதித்துறையின் உண்மையான கோலத்தை – முகத்தை – வெளிப்படுத்தி நிற்கின்றது.

இலங்கையில் உண்மையாகப் பேரவலங்களையும், பேரழிவுகளையும், போரழிவுகளையும் மோசமாக எதிர்கொண்டு நிற்கும் சகோதர இனத்துக்கு நீதி செய்யும் தகைமை பெறாத இலங்கையின் நீதித்துறை, தென்னிலங்கை அரசியல் விடயங்களில் துணிச்சலுடன் செயலாற்றுகின்றமையை பாதிக்கப்பட்ட தமிழினம் சிலாகித்துப் பேச முடியாது என்பது தான் உண்மை நிலையாகும்.

# கிழக்கில் அன்ரன் பாலசிங்கத்தின் 12ஆவது நினைவேந்தல் நிகழ்வு



மட்டக்களப்பு, டிசெ. 15

மட்டக்களப்பில் விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் தேசத்தின் குரல் அன்ரன் பாலசிங்கத்தின் 12ஆவது நினைவேந்தல் நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை அனுஷ்டிக்கப்பட்டது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மட்டக்களப்பு காரியாலயத்தில் இந்த நிகழ்வு நேற்று நடைபெற்றது.

இதன்போது, அன்ரன் பாலசிங்கத்தின் திருவுருவப் படத்திற்கு மலர் மாலை அணிவித்து பொதுச் சுடர் ஏற்றி 2 நிமிட மௌனஅஞ்சலிசெலுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் அந்தக் கட்சியின் மட்டு.இணைப்பாளர் தர்மலிங்கம் சுரேஷ், மாவட்டக் கட்சிச் செயலாளர் க.ஜெகநீதன், பொருளாளர் க.கனகசபை(நாதன்), வவுணதீவு அமைப்பாளர் வி.வினோ, மாவட்ட நிர்வாக பொறுப்பாளர் சிவலிங்கம் சுதர்சன் உட்பட பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (ஐ)

# நாட்டில் ஸ்திர நிலையை ஏற்படுத்துவதே இலக்கு

## சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு



கொழும்பு, டிசெ. 15

நாட்டில் தற்போது நிலவி வரும் குழப்ப நிலைகளுக்குத் தீர்வு கண்டு, ஸ்திரமான ஒரு நிலையை ஏற்படுத்துவதே தமது இலக்கு என, ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

மஹிந்ததரப்புதாக்கல்செய்த இடைக்கால தடையுத்தரவுக்கு எதிரான மனு மீதான விசாரணைகளுக்காக நீதிமன்றில் நேற்று பிரசன்னமாகியிருந்த அவர், நீதிமன்ற வளாகத்தில் செய்தியாளர்களிடம் பேசுகையில் இவ்வாறு குறிப்பிட்டார்.

ஜனாதிபதிக்கு எதிராகக் குற்றப்பிரேரணை கொண்டுவருவது தொடர்பாக இதுவரை எவ்வித கலந்துரையாடலும் முன்னெடுக்கப்படவில்லையென்றும் அவர் கூறினார்.

நாட்டின் அரசியல் ஸ்திரமற்ற நிலையைச் சீர்செய்வதே தற்போதைய இலக்கு எனக் குறிப்பிட்ட சஜித், அதன் பின்னரே ஏனைய விடயங்கள் தொடர்பாக ஆராயப்படுமெனவும் தெரிவித்தார். (ஐ)

# தேர்தலுக்காக சர்வஜன வாக்கெடுப்பு ஜனநாயகத்தை அழிக்கும் செயலே!

## 'பவ்ரல்' அமைப்பு சுட்டிக்காட்டு

கொழும்பு, டிசெ. 15

இலங்கையில் தேர்தலொன்று அவசியமா இல்லையா என்பது தொடர்பாக தீர்மானிப்பதற்குச் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டுமெனச் சில அரசியல்வாதிகள் குறிப்பிடுகின்றமை தேர்தலின் ஜனநாயகத்தை இல்லாமல்செய்யும் தேசவிரோதச் செயற்பாடாடென 'பவ்ரல்' அமைப்பின் நிறைவேற்றுப்பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்திய ஒரு தரப்பினர் தற்போது தேர்தல் தொடர்பிலும் குழப்ப நிலையை ஏற்படுத்தி வருகின்றனர் எனப் பரவலாக பேசப்பட்டு வருகின்றது. இவ்விடயம் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே ரோஹண ஹெட்டியாராச்சி இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஜனாதிபதியிலிருந்து சாதாரண பிரஜை வரை அனைவரும் நாட்டில் காணப்படும் சட்டதிட்டங்களை மதித்து அதற்கேற்றவாறே செயற்படவேண்டும்.

ஆனால் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் அரசமைப்பை மதித்துச் செயற்படாமையால் தற்போது பெரும் பிரச்சினை நாட்டில் தோற்றம்பெற்றுள்ளது.

இவ்வாறு தங்கள் கடமையை மறந்து அதற்கு முரணாக செயற்படுகின்றமை தேசப்பற்றுக்கு விரோதமான செயலாகும்.

ஆகையால் அரசியல்வாதிகள் அனைவரும் மக்களையும், நாட்டையும் கருத்திற்கொண்டு சிந்தித்துச் செயலாற்றவேண்டியது அவசியம் – என்றார். (ஐ)

# ஐ.தே.க. - பெரமுன ஆதரவாளர் மோதல்

கொழும்பு, டிசெ. 15

ஜனாதிபதி நாடாளுமன்றத்தைக் கலைத்தமை சட்டவிரோதமானதென உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்ததையடுத்து சேருநுவர பகுதியில் ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் மொட்டு ஆதரவாளர்களுக்கிடையில் இடம்பெற்ற மோதலில் இவர் காயமடைந்துள்ளனரென பொலிஸார் தெரிவித்தனர்.

ஐ.தே.க ஆதரவாளர்கள் வெற்றிக் களிப்பை கொண்டாடும் வகையில் பட்டாசுகளைக் கொளுத்தியபோது, இதனை அவதானித்த மொட்டு ஆதரவாளர் ஒருவர் புகைப்படம் எடுத்தபோது மோதல் இடம்பெற்றுள்ளது.

மோதலில் காயமடைந்தவர்கள் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் சேருநுவர பிரதேச சபையின் ஐ.தே.க உறுப்பினரான சுசுத் ராமநாயக்கவும் அடங்குகிறார் எனப் பொலிஸார் கூறினர்.

சம்பவம் தொடர்பில் இரு தரப்பு முறைப்பாடுகளுக்கமைய விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், சந்தேக நபர்கள் இருவரை கைது செய்துள்ளனர். (ஐ)

## நாளை

16.12.2018
ஞாயிற்றுக்கிழமை
நட்சத்திரம்: உத்திரட்டாதி பி.இ 12.32 வரை
திதி : நவமி பி.இ 4.12 வரை
சுபநேரம் : 9.22 – 10.52 வரை
இராகுகாலம் : 4.52 – 6.22 வரை

# நிறைவேற்றதிகாரத்துக்கு சமாதி கட்ட '20' ஐ கையிலெடுகின்றது ஜே.வி.பி.!



கொழும்பு, டிசெ. 15

நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை முற்றாக இல்லாதொழிக்க கோரும் அரசமைப்பின் 20 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் நாட்டு மக்களுக்கு தெளிவுபடுத்தி – அவர்களின் பேராதரவைப் பெறுவதற்கு மக்கள் விடுதலை முன்னணி தீர்மானித்துள்ளது.

அரசமைப்பின் 20 ஆவது திருத்தச்சட்டவரைவை –தனிநபர் பிரேரணையாக ஜே.வி.பி. நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்திருந்தது. இந்தச் சட்டமூலத்துக்கு ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவை வழங்கியிருந்தாலும், சுதந்திரக்கட்சி, கூட்டு எதிரணி ஆகியன கடுமையாக எதிர்த்தன.

'20' தொடர்பில் சமூகத்தில் கருத்தாடல்கள் உருவாக்கப்பட்டு வந்த சூழ்நிலையில், நாட்டில் அரசியல் குழப்பம் தலைதூக்கியதால் அவ்விவகாரம் அப்படியேகைவிடப்பட்டது. எனினும், நிறைவேற்று ஜனாதிபதி முறைமை ஒழிக்கப்படவேண்டியதன் கட்டாயத்தை நாட்டில் ஏற்பட்ட அரசியல் குழப்பம் உணர்த்தியுள்ளது.

ஆகவே, அரசியல் நெருக்கடிக்குத் தீர்வு காணப்பட்ட கையோடு – 20 ஆவது திருத்தச் சட்டமூலம் குறித்து மக்கள் மத்தியில் பிரசாரம் முன்னெடுத்தால் அதற்குப் பேராதரவு கிடைக்கும் என்றும், இதற்காக விசேட கருத்தரங்குகளை ஏற்பாடு செய்யவேண்டும் என்றும் ஜே.வி.பி. நேற்று முன்தினம் தீர்மானித்துள்ளது.

20 ஆவது திருத்தச்சட்டம் சபையில் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் சர்வமதத் தலைவர்கள், சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கு அது தொடர்பில் ஜே.வி.பி. தெளிவுபடுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## மஹிந்த தரப்பினருக்கு சுமந்திரன் எச்சரிக்கை



கொழும்பு, டிசெ. 15

ஐ.தே.கவுடன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இரகசிய உடன்பாடு செய்திருப்பதாகத் தொடர்ந்தும் குற்றச்சாட்டுகளை முன்வைத்தால், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, தமக்கு வழங்க முன்வந்த வாக்குறுதிகளை வெளிப்படுத்தவேண்டிய நிலை ஏற்படும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எச்சரித்துள்ளது.

ஐ.தே.கவுடன் கூட்டமைப்பு இரகசிய உடன்பாடு ஒன்றை செய்திருப்பதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன குற்றம் சாட்டி வருகிறது.

அத்துடன், ரணில் விக்கிரமசிங்கவும், இரா.சம்பந்தனும் கையெழுத்திட்டுள்ள ஆவணம் ஒன்றும், ஊடகங்களில் பரவி வருகிறது.

இந்த நிலையில், கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரன் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில்,

ரணில் விக்கிரமசிங்கவைப் பிரதமராக நியமிப்பதற்கு, எந்த உடன்பாடும் செய்துகொள்ளப்படாமலேயே கூட்டமைப்பு ஆதரவு வழங்கியது.

ஜனநாயகத்தைப் பாதுகாக்கவே கூட்டமைப்பு இந்த ஆதரவை வழங்கியிருந்தது.

இந்த நிலையில், ஐ.தே.கவுக்கும், கூட்டமைப்புக்கும் இடையில் இரகசிய உடன்பாடு செய்து கொள்ளப்பட்டுள்ளதாக, பொதுஜன பெரமுன தொடர்ந்து குற்றச்சாட்டுகளை முன்வைத்தால், எமது ஆதரவைத் தமது தரப்புக்குப் பெறுவதற்காக, நாமல் ராஜபக்ஷ உள்ளிட்டவர்கள் நடத்திய பேச்சுக்களின்போது, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன வழங்க முன்வந்த வாக்குறுதிகளை நாங்கள் அம்பலப்படுத்த நேரிடும் என்று எச்சரித்துள்ளார். (ஐ)

## ரஷ்யப் பாதுகாப்பு அதிகாரிகள் கொழும்பில் உயர்மட்டப் பேச்சு



கொழும்பு, டிசெ. 15

ரஷ்யாவின் இராணுவ நிலப்பரப்பு ஆய்வுக் குழுவைச் சேர்ந்த உயர் அதிகாரிகள் குழுவொன்று இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டு, உயர்மட்டப் பேச்சுக்களை நடத்தியுள்ளது.

ரஷ்ய இராணுவத்தைச் சேர்ந்த இராணுவ நிலப்பரப்பு ஆய்வுப் பிரிவின், மேஜர் ஜெனரல் அலெக்சாண்டர் நிக்கோலாவிச் தலைமையிலான இந்தக் குழுவினர், கடந்த புதன்கிழமை இலங்கைக் கடற்படைத் தலைமையகத்தில் பேச்சுக்களை நடத்தினர்.

இலங்கைக் கடற்படைத் தலைமை அதிகாரி றியர் அட்மிரல் பியல் டி சில்வா, கடற்படையின் பயிற்சிப் பணிப்பாளர் நந்தன ஜெயரத்ன உள்ளிட்ட அதிகாரிகளுடன் ரஷ்ய இராணுவ அதிகாரிகள் நடத்திய பேச்சுக்களின் போது, இராணுவ நிலப்பரப்பு ஆய்வு, வரைபடம், மற்றும் அளவீடுகள் துறையில் இரு தரப்பு ஒத்துழைப்பின் முக்கியத்துவம் குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது. (ஐ)

## மூடப்பட்ட அறைக்குள் மைத்திரி – ரணில் – கரு!

கொழும்பு, டிசெ.15

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்றுமுன்தினம் இரவு, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் சபாநாயகர் கரு ஜயசூரிய ஆகியோருடன், தனியான சந்திப்பு ஒன்றை நடத்தியுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு நடந்த இந்தச் சந்திப்பு மூடிய அறைக்குள் இடம்பெற்றதாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

சுமார் 10 நிமிடங்கள் வரை இந்தச் சந்திப்பு நீடித்ததாகவும், கூறப்படுகிறது.

தற்போதைய அரசியல் நெருக்கடியைத் தீர்ப்பது குறித்து இந்தச் சந்திப்பில் பேசப்பட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஐ)

### கொழும்பில் தமிழ் இளைஞர்கள் கடத்தல்;

## மேலும் இரு கடற்படை அதிகாரிகள் குற்றப் புலனாய்வுப் பிரிவால் கைது



கொழும்பு, டிசெ. 15

தமிழ் இளைஞர்கள் கடத்தப்பட்டுக் காணமலாக்கப்பட்ட விவகாரம் தொடர்பாக மேலும் இரு கடற்படை அதிகாரிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் இந்த இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என நேற்றுத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த 2008 மற்றும் 2009ஆம் ஆண்டு காலப்பகுதியில், கொழும்பு மற்றும் அதன் புறநகர்ப் பகுதிகளில் 11 தமிழ் இளைஞர்கள் கடத்தப்பட்டுக் காணாமலாக்கப்பட்டனர்.

கடந்த ஆட்சிக்காலத்தில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில், நல்லாட்சி அரசில் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் பிரகாரம் கடற்படையின் முன்னாள் பேச்சாளர் உள்ளிட்ட அறுவர் கைது செய்யப்பட்டுப் பின்னர் விடுதலை செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## சி.சி.ரி.வியால் சிக்கிய சங்கிலி திருடர்கள்!

முல்லைத்தீவு, டிசெ. 15

முல்லைத்தீவில் யுவதி ஒருவரின் தங்கச் சங்கிலியை அறுத்துச் சென்ற இரண்டு சந்தேக நபர்களைப் பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்தனர்.

யுவதி ஒருவர் உடுப்புக்குளம் பிரதான வீதி வழியே சிலாவத்தை நோக்கி பயணித்துக் கொண்டிருந்தார். அப்போது மோட்டார் சைக்கிளில் வந்த இரண்டு நபர்கள் யுவதியை இடைமறித்து அவர் அணிந்திருந்த பெறுமதியான தங்கச் சங்கிலியை அறுத்துச் சென்றனர்.

இந்தச் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட யுவதி முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார். இதன் அடிப்படையில் சிலாவத்தை பிரதான வீதியில் இயங்கும் நிறுவனம் ஒன்றில் பொருத்தப்பட்டிருந்த சி.சி.ரி.வி. கமரா பொலிஸாரினால் பரிசோதிக்கப்பட்டது. சி.சி.ரி.வி. கமராவின் உதவியுடன் சங்கிலி அறுத்த நபர்கள் அடையாளம் காணப்பட்ட நிலையில் சந்தேகநபர்களைப் பொலிஸார் நேற்றுமுன்தினம் கைது செய்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ஐ)

## மன்னார் மனிதப் புதைகுழி அகழ்வுப்பணி இடைநிறுத்தம்

மன்னார், டிசெ. 15

மன்னார் மனிதப் புதைகுழி அகழ்வுப் பணிக்குப் பொறுப்பான சட்டவைத்திய அதிகாரி கடமை நிமித்தம் கொழும்பு சென்றுள்ளமையால் மேற்படி அகழ்வுப் பணி இடைநிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அகழ்வுப் பணிகள் மீண்டும் நாளை மறுதினம் திங்கட்கிழமை சட்ட வைத்திய அதிகாரி சமிந்த ராஜபக்ஷ தலைமையில் ஆரம்பிக்கப்படுமெனவும் கூறப்பட்டது.

இந்தப் புதைகுழியில் இருந்து இதுவரை 21 சிறுவர்களின் எலும்புக்கூடுகள் உட்பட மொத்தம் 276 முழு மனித எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

அவற்றில் 269 மனித எலும்புக்கூடுகள் அகழ்ந்தெடுக்கப்பட்டு நீதிமன்றத்தின் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளன. (ஐ)

# பெங்களூரு சிறையில் சசிகலாவை குடைந்தது வருமானவரித் துறை!

பெங்களூரு,டிசெ.15

சென்னையில் பல இடங்களிலும்நடந்த வருமானவரிச்சோதனையின் தொடர்ச்சியாக பெங்களூரு சிறையில் இருக்கும் சசிகலாவிடம் வருமான வரித்துறை அதிகாரிகள் வியாழனன்று சுமார் 7 மணி நேரம் விசாரணை நடத்தினார்கள். நேற்றும் அது தொடர்ந்தது.

தமிழக முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் மறைவுக்கு பிறகு அவருக்குச் சொந்தமான போயஸ் கார்டனில் உள்ள வேதா இல்லத்திலும், ஜெயா டி.வி. அலுவலகம் மற்றும் தமிழகம் முழுவதும் தொடர்புடைய வீடுகளில் வருமான வரி சோதனை நடைபெற்றது.

ஜெயலலிதா வீட்டில் சோதனை நடத்திய அதிகாரிகள், அங்கு சசிகலா தங்கியிருந்த அறையிலும்சோதனை நடத்தினர். அங்கு சில முக்கியமான ஆவணங்களை அதிகாரிகள் கைப்பற்றினர்எனக்கூறப்படுகிறது. இந்தச் சோதனையை அடுத்து ஜெயா ரி.வி. நிர்வாகி உட்பட பல்வேறு நபர்களை நேரில் வரவழைத்து விசாரணை நடத்தினர்.

இந்தநிலையில்சொத்துக்குவிப்பு வழக்கில் சிறைத் தண்டனை பெற்று பெங்களூரு சிறையில் உள்ள சசிகலாவிடமும் விசாரணை நடத்த



வருமான வரித்துறை அதிகாரிகள் முடிவு செய்தனர்.

இதையடுத்து பெங்களூரு சிறையில் சசிகலாவிடம் விசாரணை நடத்த 2 நாட்கள் அனுமதி வழங்கக் கோரி கர்நாடக அரசின் சிறைத்துறை நிர்வாகத்திற்கு வருமான வரித்துறை சார்பில் கடிதம் எழுதப்பட்டது.

அதற்கு 13 மற்றும் 14 ஆம் திகதிகளில் சசிகலாவிடம் விசாரணை நடத்த சிறைத்துறை வருமான வரித்துறை அதிகாரிகளுக்கு அனுமதி வழங்கியது. அதன்படி வருமான வரித்துறை அதிகாரிகள் வியாழனன்று காலை 11 மணியளவில் ஒரு காரில் பெங்களூரு பரப்பனஅக்ரஹார சிறைக்கு வந்தனர்.

அதிகாரி வீரராகவராவ் தலைமையில் வந்த 5 பேர் கொண்ட குழுவில் ஒரு பெண் அதிகாரியும் இடம் பெற்றிருந்தார்.

இந்தவிசாரணைக்காக சிறைக்குள் ஒரு தனி அறை ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. அங்கு வைத்து சசிகலாவிடம் வருமானவரி அதிகாரிகள் அடுக்கடுக்கான கேள்விகளை கேட்டு பதில்களை பெற்றனர். மதிய உணவுக்காக சசிகலாவுக்கு ஒரு மணி நேரம் அவகாசம் வழங்கப்பட்டது.

நேற்று முன்தினம் காலை 11 மணிக்கு சிறைக்குள் சென்ற அதிகாரிகள் மாலை 6 மணியளவில் வெளியே வந்தனர். 7 மணி நேரத்திற்கும் அதிகமாக சசிகலாவிடம் விசாரணை நடைபெற்றது.

சுமார் 500 கேள்விகள் அவரிடம்கேட்கப்பட்டு, அதற்குரிய பதில்கள் பெறப்பட்டன. இந்த விசாரணை நிகழ்வு முழுவதும் வீடியோவாக பதிவு செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது. சசிகலாவிடம் நேற்றும் (வெள்ளிக்கிழமையும்) விசா ரணை தொடர்ந்து நடைபெற்றது.

# வட தமிழகத்தை இன்று 'பெய்ட்டி' புயல் தாக்கும்

சென்னை,டிசெ.15

வங்க கடலில் நேற்றுப் புயல் உருவாகியிருப்பதால் வடதமிழக கடலோர மாவட்டங்களில்இன்றும் நாளையும், கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தென் கிழக்கு வங்க கடலில் கடந்த 3 தினங்களுக்கு முன்பு உருவான காற்றமுத்த தாழ்வுப் பகுதி, தீவிர காற்றமுத்த தாழ்வுப் பகுதியாக நிலை கொண்டு இருந்தது.

அது தற்போது தீவிர காற்றமுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற்று, நேற்று (வெள்ளிக்கிழமை) புயலாக உருவானது. இதன் காரணமாக வட தமிழக கடலோர மாவட்டங்களில் 2 நாள்கள் கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்து இருக்கிறது.

இதுகுறித்து சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் எஸ்.பாலச்சந்திரன் நிருபர்களிடம் கூறியவை வருமாறு:–

தென் கிழக்கு வங்க கடலில் நிலை கொண்டு இருந்த வலுவான காற்றமுத்தத் தாழ்வுப் பகுதி, தாழ்வு மண்டலமாக மாறி, தீவிர காற்றமுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற்று இருக்கிறது.

இது சென்னைக்கு தென் கிழக்கே 1,150 கி.மீ. தொலைவிலும், ஆந்திராவின் மசூலிப்பட்டினத்



துக்குதெற்கு, தென் கிழக்கே1,330கி.மீ. தொலைவிலும் நிலைகொண்டுள்ளது. தீவிர காற்றமுத்த தாழ்வு மண்டலம், புயலாக உருவானது. தற்போதைய நிலைவரப்படி இந்த புயல் தெற்கு ஆந்திரா மற்றும் வடக்கு தமிழக கடலோர பகுதிகளை நோக்கி நகரக்கூடும்.

இதன் காரணமாக 15 (இன்று),16 (நாளை) ஆகிய திகதிகளில் வட தமிழக கடலோர மாவட்டங்களில் மணிக்கு 45 கி.மீ. முதல் 55 கி.மீ. வரை பலத்த காற்று வீசக்கூடும். வடதமிழகத்தின் கடலோர மாவட்டங்களில் சில இடங்களில் கனமழையும் பெய்யும்.

இதனால் இன்றும் நாளையும் தென்மேற்கு மற்றும் அதனை ஒட்டியுள்ள மத்திய மேற்கு வங்க கடல் பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம். ஆழ்கடலுக்கு மீன்பிடிக்க சென்ற மீனவர்கள் கரை திரும்ப எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. – என்றார்.

இந்தப்புயலுக்கு 'பெய்ட்டி' என்று பெயர் சூட்டப்பட்டிருக்கிறது. இந்த பெயர் தாய்லாந்து நாட்டின் சார்பில் வைக்கப்பட உள்ளது.

# மத்திய பிரதேசத்தில் திங்களன்று முதல்வராக கமல்நாத் பதவியேற்பு

போபால்,டிசெ.15

பகுஜன் சமாஜ் கட்சி, சமாஜ்வாடி கட்சி ஆகியவற்றின் ஆதரவுடன் காங்கிரஸ் கட்சியின் கமல் நாத் வரும் 17 ஆம் திகதி(நாளை மறுதினம்) முதல்வராகப் பதவியேற்க உள்ளார்.



மத்திய பிரதேசத்தில் காங்கிரஸ் கட்சி 114 இடங்களில் வெற்றி பெற்று தனிப்பெரும் கட்சியாக உள்ளது. பாஜக 109 இடங்களிலும், சமாஜ்வாடி கட்சி ஓர் இடத்திலும், பகுஜன் சமாஜ் கட்சி 2 இடங்களிலும் வெற்றி பெற்றுள்ளன. சுயேச்சைகள் 4 தொகுதிகளில் வென்றுள்ளனர்.

ஆட்சியமைக்க 116 உறுப்பினர்களின் ஆதரவு தேவை என்ற நிலையில், காங்கிரஸுக்கு சமாஜ்வாடி கட்சி மற்றும் பகுஜன் சமாஜ் கட்சி ஆதரவு தெரிவித்தது. சுயேச்சை எம்.எல்.ஏ.க்கள் 4 பேரும் காங்கிரஸுக்கு ஆதரவு தெரிவித்தனர். இதனால், காங்கிரஸ் பலம் 121 ஆக உயர்ந்தது.

இதையடுத்து, மாநில காங்கிரஸ் கமிட்டி தலைவர் கமல் நாத் தலைமையில் காங்கிரஸ் தலைவர்கள் ஆளுநரை சந்தித்து ஆட்சியமைக்க உரிமை கோரினர்.

பின்னர் முதலமைச்சரைத் தேர்வு செய்வதற்கான நடவடிக்கைகள் தொடங்கின. மாநில காங்கிரஸ் தலைவரும், முன்னாள் மத்திய மந்திரியுமான கமல் நாத், மூத்த தலைவர்கள் ஜோதிராதித்ய சிந்தியா, திக்விஜய்சிங் ஆகியோர் முதல்வர் பதவிக்கான போட்டியில் இருந்தனர். இவர்களில் திக்விஜய்சிங், கமல்நாத்துக்கு ஆதரவு தெரிவித்தார். இதனால் கமல்நாத் – ஜோதிர் ஆதித்ய சிந்தியா இடையே போட்டி நிலவி வந்தது.

இந்நிலையில் போபாலில் நடைபெற்ற காங்கிரஸ் எம்.எல்.ஏக்கள் கூட்டத்தில், சட்டமன்ற கட்சி தலைவராக கமல் நாத் ஒருமனதாகத் தேர்வு செய்யப்பட்டார். இதையடுத்து அவர் வரும் 17ஆம் திகதி முதல்வராக பதவியேற்க உள்ளார். போபாலில் உள்ள லால் பாரடே கிரவுண்டில் பதவியேற்பு விழா நடைபெறும் என தகவல் வெளியாகி உள்ளது.

# தெலுங்கானா முதலமைச்சராக சந்திரசேகர ராவ் பதவியேற்பு

ஐதராபாத், டிசெ.15

தெலுங்கானா மாநில முதலமைச்சராக சந்திரசேகர ராவ் இரண்டாவது முறையாக நேற்று முன்தினம் பதவி ஏற்றுக் கொண்டார்.

ஆந்திராவில் இருந்து தனியாக பிரிக்கப்பட்ட தெலுங்கானா மாநிலத்தில் சட்டசபையை கலைத்துவிட்டு முன்கூட்டியே தேர்தலை சந்திக்க முடிவு செய்தார் முதலமைச்சர் சந்திரசேகர ராவ். அதன்படி சட்டசபையைக் கலைத்து தேர்தலிலும் போட்டியிட்டார். மாநிலத்தில் உள்ள 119 சட்டசபைத் தொகுதிகளுக்கும் கடந்த 7 ஆம் திகதி தேர்தல் நடந்தது.

இதில் தெலுங்கானா ராஷ்டிர சமிதி ஓர் அணியாகவும், காங்கிரஸ், தெலுங்கு தேசம், இந்திய கம்யூனிஸ்டு ஆகியவை மெகா கூட்டணி அமைத்து மற்றொரு அணியாகவும் போட்டியிட்டன. பா.ஜனதா தனித்து களம் கண்டது.

இந்தத் தேர்தலில் தெலுங்கானா ராஷ்டிர சமிதி 88 தொகுதிகளில் வெற்றி பெற்று தனிப்பெரும்பான்மை




யுடன் ஆட்சியை கைப்பற்றியது. காங்கிரஸ் கூட்டணிக்கு 22 இடங்கள் மட்டுமே கிடைத்தன.

அதைத்தொடர்ந்து புதனன்று ஐதராபாத்தில் நடைபெற்ற எம்.எல்.ஏ.க்கள் கூட்டத்தில் சந்திரசேகர ராவ் முதலமைச்சராகத் தேர்வு செய்யப்பட்டார்.

இந்தநிலையில் வியாழனன்று ஆளுநர் மாளிகையில் பதவியேற்பு விழா நடைபெற்றது. ஜோதிடர் குறித்துக் கொடுத்த நேரப்படி மதியம் 1.34 மணிக்கு சந்திரசேகர ராவ் பதவி ஏற்றுக்கொண்டார். அவருக்கு ஆளுநர் நரசிம்மன் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். அவருடன் மகமத் அலி அமைச்சராகப் பதவி ஏற்றார். மேலும் 18க்கும் மேற்பட்ட அமைச்சர்கள் இன்னும் சில நாள்களில் பதவி ஏற்க உள்ளனர்.

# துருக்கியில் மோசமான ரயில் விபத்து; 9 பேர் சாவு! ஐம்பது பேர் வரை காயம்!!

## தரித்து நின்ற என்ஜினுடன் அதிவேக ரயில் மோதியது



அங்காரா,டிசெ.15

துருக்கியின் தலைநகர் அங்காராவில் தண்டவாளத்தில் தரித்து நின்ற ரயில் என்ஜினுடன் அதிவேக ரயில் ஒன்று மோதித் தண்டவாளத்தை விட்டுத் தடம் புரண்டு மோசமான விபத்துக்குள்ளானதில் 9 பேர் உயிரிழந்தனர். ஐம்பது பேர் வரை படுகாயமடைந்தனர்.

அங்காராவில் இருந்து, நாட்டின் மத்திய பகுதியில் உள்ள கொன்யா நகருக்கு வியாழனன்று காலை ஒரு அதிவேக ரயில் புறப்பட்டு சென்று கொண்டிருந்தது.

அது, உள்ளூர் நேரப்படி காலை 6.30 மணிக்கு மார்சண்டீஸ் ரயில் நிலையத்தை கடந்து சென்றது.

அப்போது அங்கே தண்டவாளத்தை சோதிக்கும் பணியில் ஈடுபட்டிருந்த ரயில் என்ஜினுடன், அந்த அதிவேக ரயில் கடுமையாக மோதி, பயணிகள் நடந்து செல்லும் பாதையில் பாய்ந்தது. இதில் அந்த ரயிலின் 2 பெட்டிகள் தடம்புரண்டன. விபத்தின்போது பலத்த சத்தம் எழுந்ததால், பயணிகள் அச்சத்தில் அலறினர்.

இந்தக் கோர விபத்தில் 4 பேர் உடல் நசுங்கி பரிதாபமாக உயிரிழந்தனர் என முதல் கட்டத் தகவல்கள் வெளியாகின.

ஆனால் பின்னர் 9 பேர் பலியாகினர் எனவும், 47 பேர் படுகாயம் அடைந்தனர் எனவும் உறுதி செய்யப்பட்டது.

விபத்துக் குறித்து தகவல் அறிந்ததும் மீட்புப்படையினர் விரைந்து சென்று மீட்புப் பணிகளில் ஈடுபட்டனர். படுகாயம் அடைந்தவர்கள் மீட்கப்பட்டு அம்புலன்ஸ்களில் ஆஸ்பத்திரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். இந்த விபத்துக் காரணமாக அந்த தடத்தில் சில மணி நேரம் ரயில் போக்குவரத்து பாதித்தது.

இந்த ரயில் விபத்து சிக்னல் கோளாறு காரணமாக நடந்திருக்கக்கூடும் என முதல் கட்டத் தகவல்கள் கூறுகின்றன. இருப்பினும் இது குறித்து விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

# ஒரே சமயத்தில் 2 பெண்களை திருமணம் செய்த இளைஞன்!



கென்யாவில் இளைஞர் ஒருவர் ஒரே சமயத்தில் இரு பெண்களைத் திருமணம்செய்துகொண்ட சம்பவம் அரங்கேறியுள்ளது.

கென்யாவின் கஜியாடோ மாகாணத்தைச் சேர்ந்த இளைஞர் ஒரே நேரத்தில் இரு பெண்களைக் காதலித்து வந்துள்ளார். இதையடுத்து இருவரையும் திருமணம் செய்ய விரும்பிய அவர் இது குறித்து காதலிகளிடம் பேசியுள்ளார். இதற்கு எதிர்ப்பு தெரிவிக்காத காதலிகள் தங்கள் காதலனை ஒரே மேடையில் திருமணம் செய்ய ஒப்புக் கொண்டனர். அதன்படி உறவினர்கள், நண்பர்கள் முன்னிலையில் அந்த இளைஞர் தனது இரண்டு காதலிகளையும் ஒரே நேரத்தில் திருமணம் செய்து கொண்டார்.

திருமணம் முடிந்த பின்னர் இரண்டு மணப்பெண்களும் ஜாலியாக ஆடி பாடினார்கள். கென்யாவில் பலதார மணம் என்பது சகஜம்தான். ஆனால் ஒரே நேரத்தில் இரண்டு பெண்களைத் திருமணம் செய்து கொள்வது என்பது மிகவும் அரிதான நிகழ்வாகவே பார்க்கப்படுகிறது.

# 2022 பொதுத் தேர்தலுக்கு முன்னர் பிரி. பிரதமர் மே பதவி விலகுவாராம்



லண்டன்,டிசெ.15

2022 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலுக்கு முன்னர் தாம் பிரதமர் பதவியிலிருந்து விலகிவிடுவார் என்று இங்கிலாந்துப் பிரதமர் தெரசா மே தெரிவித்துள்ளார்.

பிரஸ்சல்ஸ் சென்றுள்ள தெரசா மே, ஐரோப்பிய நாடுகளின் தலைவர்கள் 27 பேரை சந்தித்துப் பேச உள்ளார்.

இந்தச் சூழலில் பிரஸ்சல்ஸில் தெராசே மே கூறுகையில், ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரிட்டன் வெளியேறுவது தொடர்பான பிரெக்சிட் ஒப்பந்த விவகாரத்தில் உடனடியாக எந்தத் திருப்பு முனையையும் தான் எதிர்ப்பார்க்கவில்லை என்றார். மேலும், வரும் 2022 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலுக்கு முன்பாகவே தான் பதவி விலக இருக்கிறார் எனவும் தெரிவித்தார்.

பிரெக்சிட் ஒப்பந்த விவகாரத்தை ஒட்டி அவரைப் பிரதமர் பதவியிலிருந்தும், கட்சித் தலைவர் பதவியிலிருந்தும் அகற்ற கட்சிக்குள் முன்னெடுக்கப்பட்ட முயற்சியை சில தினங்களுக்கு முன்னர் தான் அவர் வெற்றிகரமாக முறியடித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

# வீதியில் ஆறாக ஓடி கட்டியான ஒரு தொன் திரவ சொக்லெட்!



ஜேர்மனியில் சுமார் ஒரு தொன் திரவ சொக்லெட் விதியில் ஆறாக ஓடிக் கட்டியாக மாறியது.

ஜேர்மனில் வெஸ்டான்னேன் என்னும் இடத்தில் ட்ரேமேய்ஸ்டெர் என்னும் சொக்லேட் தயாரிக்கும் தொழிற்சாலையில், திரவ சொக்லேட் சேமித்து வைத்திருக்கும் பிரமாண்டமான தாங்கி திடீரென உடைந்துள்ளது. அதிலிருந்து வீதிவழியே வழிந்தோடிய திரவ சொக்லெட் குளிர் காரணமாக, சில நிமிடங்களில் இறுகிக் கட்டியாக ஆனதால், அங்கு வாகனங்கள் செல்ல வழியின்றி அந்த வீதி மூடப்பட்டது.

25 தீயணைப்புப் படை வீரர்கள் மற்றும் அந்தத் தொழிற்சாலையின் ஊழியர்கள் சேர்ந்து மண்வெட்டி, சுடுநீர், நெருப்பு ஆகியவற்றைப் பயன்படுத்தி, மிகுந்த சிரமத்துடன் சொக்லெட்டை அகற்றி, போக்குவரத்தைச் சீர்செய்தனர்.

இந்நிலையில், சாலையில் கொட்டிய ஒரு தொன் சொக்லெட்டினால், அதன் தயாரிப்பு எதுவும் பாதிக்கப்படாது எனவும், இரண்டு தினங்களில் மீண்டும் தயாரிப்பு வேலைகள் தொடங்கிவிடும் என்றும் ட்ரேமேய்ஸ்டெர் நிறுவனம் வாடிக்கையாளர்களுக்குத் தெரிவித்துள்ளது.

# வெனிசூலாவில் அதிபரைக் கொன்று ஆட்சியைக் கவிழ்க்க அமெ. சதியாம்!

## அந்நாட்டு ஜனாதிபதியே பரபரப்புக் குற்றச்சாட்டு

தன்னைக் கொலை செய்யவும், வெனிசூலாவில் ஆட்சியை கவிழ்க்கவும் அமெரிக்கா சதி திட்டம் தீட்டுவதாக அந்நாட்டின் அதிபர் நிக்கோலஸ் மதுரோ பரபரப்பு குற்றம் சாட்டி உள்ளார்.

தென் அமெரிக்க நாடுகளில் ஒன்றான வெனிசூலாவில் கடும் பொருளாதார நெருக்கடி நிலவுகிறது. இதன் காரணமாக 2014 ஆம் ஆண்டு முதல் சுமார் 20 லட்சம் மக்கள் அந்நாட்டை விட்டு வெளியேறி விட்டனர்.

வெனிசூலாவில் அதிபராக உள்ள நிக்கோலஸ் மதுரோ, நாட்டில் நிலவும் பொருளாதார பிரச்சினைகளுக்கு தீர்வு காண எந்த ஒரு நடவடிக்கையையும் எடுக்கவில்லை எனவும், மாறாக அவர் சர்வாதிகார ஆட்சியில் ஈடுபடுகிறார் எனவும் அமெரிக்கா குற்றம் சாட்டுகிறது.

இதனைக் காரணம் காட்டி அதிபர் நிக்கோலஸ் மதுரோ அரசு மீது அமெரிக்க ஜனாதிபதி டிரம்பின் நிர்வாகம் பல்வேறு பொருளாதார தடைகளை விதித்துள்ளது. இதனால் இருநாடுகளுக்கும் இடையே மோதல் போக்கு நீடிக்கிறது.

இந்த நிலையில், தன்னைக் கொலை செய்யவும், வெனிசூலாவில் ஆட்சியை கவிழ்க்கவும் அமெரிக்கா சதி திட்டம் தீட்டுவதாக நிக்கோலஸ் மதுரோ பரபரப்பு குற்றம் சாட்டி உள்ளார். அதிபர் மாளிகையில் பத்திரிகையாளர்களுக்கு பேட்டி அளித்த போது அவர் இது தொடர்பாகக் கூறியவை வருமாறு:-

என்னைப் படுகொலை செய்யவும், வெனிசூலாவில் அயல்நாட்டு படைகளை குவித்து இடைக்கால அரசாங்கத்தை அமைக்கவும் அமெரிக்கா சதி திட்டம் தீட்டி வருகிறது. இந்தப் பொறுப்பு அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜோன் போல்டனிடம் ஒப்படைக்கப்பட்டு உள்ளது. அதனை எதிர்கொள்ள நட்பு நாடுகளின் உதவியோடு வெனிசூலா மக்கள் தயராக இருக்கிறார்கள். - என்றார்.

# கே.ஜி.பியின் உளவாளியாக புடின்; பழைய அடையாள அட்டை மீட்பு!




தற்போதைய ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் முன்னர் சோவியத் ஒன்றியத்தின் உளவாளியாக கிழக்கு ஜேர்மனியில் பணியாற்றிய போது அவருக்கு வழங்கப்பட்ட புகைப்பட அடையாள அட்டையின் படம் கண்டுபிடிக்கப்பட்டு, வெளியாகிப் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

டிரெஸ்டென்யில் உள்ள ஸ்டாசி இரகசியப் பொலிஸ் காப்பகத்தில் இந்த அடையாள அட்டை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

1985 ஆம் ஆண்டில் சோவியத்தின் புலனாய்வுப் பிரிவான கே.ஜி.பியில் அவர் பதவி பெற்றார். அது அவருக்கு ஸ்டாசி வசதிகளுடன் கிடைத்தது. ஸ்டாசி ரெக்கார்ட்ஸ் ஏஜென்சி இதுகுறித்து குறிப்பிட்ட போது, தனது பணியை நிறைவேற்றிக்கொள்வதற்காக அவருக்கு இந்த அடையாள அட்டை வழங்கப்பட்டது என விளக்கமளித்துள்ளது.

ஸ்டாசி என்பது கிழக்கு ஜேர்மனியப் பாதுகாப்பு அமைச்சகத்தின் புனைபெயர் ஆகும். சாதாரண குடிமக்கள் பற்றிய அதன் கண்காணிப்புக்கு இது மிகவும் புகழ் பெற்றது. அவர்களில் பலர் ஒருவருக்கொருவர் உளவு பார்க்கப்பட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(உ)



# வடக்குக்குச் சீனாவுடன் நெருங்கிய வணிக உறவு

புராதான பட்டுப் பாதையுடன் தொடர்புபட்ட விடயங்களை இலங்கையில் ஆய்வு செய்யும் பணியை சீனாவிலுள்ள ஷங்காய் அருங்காட்சியகத்தைச் சேர்ந்த தொல்பொருளியலாளர்கள் அண்மையில் மேற்கொண்டிருந்தனர்.

உலகிலுள்ள ஏனைய நாடுகளுடனான தொடர்பை மேலும் பலப்படுத்தும் நோக்கில் தனது புராதன பட்டுப்பாதையை அடிப்படையாகக் கொண்டு சீனாவினால் ஓர் அணை மற்றும் ஒரு பாதைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட போது இவ்வாறான தொல்பொருள் ஆய்வுகளும் இடம்பெற்றன.

இந்த வகையில் சீனாவின் ஓர் அணை மற்றும் ஒரு பாதைத் திட்டத்துடன் தொடர்புபட்ட நாடுகளுள் இலங்கையும் ஒன்றாக இருப்பதால்சீனாவின்ஷங்காய்அருங்காட்சியக தொல்பொருளியலாளர்கள் அண்மையில் இலங்கையில் தமது தொல்பொருள் ஆய்வை மேற்கொண்டிருந்தனர்.

ஐந்து பேரைக் கொண்ட இத்தொல்பொருளியில் குழுவின் தலைவரான சென் ஜீயுடன் டெய்லி மிரர் நாளிதழுக்கு அளித்த செவ்வியில், புராதன பட்டுப்பாதையில் இலங்கையின் அமைவிடம் எத்தகையது என்பது தொடர்பாகவும் அண்மையில் தம்மால் மேற்கொள்ளப்பட்ட தொல்பொருளியயில் ஆய்வு மற்றும் அதன் போது கண்டு பிடிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாகவும் சென் ஜீ பகிர்ந்து கொண்டார்.

அதன் விவரம் வருமாறு:

கேள்வி: புராதன பட்டுப்பாதையில் இலங்கையின் அமைவிடம் தொடர்பாக தங்களின் கருத்து எதுவாக உள்ளது?

பதில்: கரையோர பட்டுப்பாதையானது சீன கரையோர துறைமுகங்களிலிருந்து ஆரம்பமாகிறது. அதாவது தென்கிழக்காசிய நாடுகளின் ஊடாக இந்திய மாக்கடல், செங்கடல், ஐரோப்பா மற்றும் கிழக்கு ஆபிரிக்கா வரை இப்பாதை விரிந்து காணப்படுகிறது. வர்த்தக, கலாசார பரிமாற்றங்கள் மற்றும் பட்டுப்பாதையிலுள்ள நாடுகளின் அபிவிருத்தியை அதிகரித்தல் போன்றவற்றுக்கான ஓர் அனைத்துலக வலைப்பின்னலாக இப்பட்டுப்பாதை நிர்மாணிக்கப்பட்டது.

இந்திய மாக்கடலின் மையத்திலும் கிழக்கு மற்றும் மேற்குலக கடல்வழிப் பாதையின் மையத்திலும் இலங்கை அமைந்துள்ளதால் இது கடல்வழி வர்த்தகத்தில் முக்கிய பங்காற்றியுள்ளது. இலங்கை மற்றும் சீனாவிற்கு இடையிலான தொடர்புகள் 2000 ஆண்டுகளுக்கு முற்பட்டதாகும். 5ம் நூற்றாண்டில் சீனாவின் பிரபல பிக்குவான பா சியான் பௌத்தத்தைக் கற்பதற்காக இலங்கையில் இரண்டு ஆண்டுகள் தங்கியிருந்தார்.

ஆறாம் நூற்றாண்டு தொடக்கம், இலங்கை மற்றும் சீனா ஆகிய இரு நாடுகளுக்கும் இடையிலான பரிமாற்றங்கள் மேலும் அதிகரித்தன. குறிப்பாக 15ஆம் நூற்றாண்டில், ஜெங் கீ என்பவர் கடல் வழியாக மேற்கொண்ட பயணத்தின் போது இலங்கையின் பல இடங்களில் தங்கியிருந்தார். இவ்விரு நாடுகளைச் சேர்ந்த மக்களும் தமது வர்த்தகத் தொடர்பை மேலும் விரிவுபடுத்தியதுடன் தமக்கிடையிலான நட்புறவையும் பலப்படுத்தியுள்ளனர்.

1911இல் காலியில் கண்டுபிடிக்கப்பட்ட மும்மொழி கல்வெட்டானது சீனாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான தொடர்பாடல் வலுப்பெற்றிருந்தமைக்கான முக்கிய



சான்றாக அமைந்தது.

2018 தொடக்கம், மத்திய கலாசார நிதி மற்றும் ஷங்காய் அருங்காட்சியகம் ஆகியவற்றுக்கு இடையிலான ஒத்துழைப்பின் ஊடாக சீனோ – லங்கா தொல்பொருளியல் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இலங்கை ஊடான கரையோர பட்டுப்பாதைத் திட்டத்துடன் தொடர்புபட்ட இடங்கள் மற்றும் அழிவுகளை ஆய்வு மற்றும் அகழ்வு செய்வதன் ஊடாக பல்வேறு நாடுகள் மத்தியில் பரிமாறப்பட்ட பொருளாதார, கலாசார, மத பரிமாற்றங்களைக் கண்டுபிடிக்கும் பணியில் கூட்டு தொல்பொருளியல் குழு ஈடுபட்டு வருகிறது.

கேள்வி: அகழ்வாராய்ச்சியின் போது நீங்கள் எவற்றை கண்டுபிடித்தீர்கள்?

பதில்: இவ்வாண்டு ஓகஸ்ட் மற்றும் செப்ரெம்பர் மாதங்களில், சீனோ – லங்கா தொல்பொருளியல் குழுவானது தனது முதலாவது அகழ்வாராய்ச்சி பணியை யாழ்ப்பாணத்தில் மேற்கொண்டது. ஊர்காவற்றுறை கோட்டைக்குள் பரீட்சார்த்த அகழி ஒன்றை அகழ்ந்த போது, ஊர்காவற்றுறையிலுள்ள அல்லைப்பிட்டியில் அகழ்வாராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது. இதன் போது குறிப்பாக அல்லைப்பிட்டியில் அகழ்வை மேற்கொண்ட பின்னர் பல முக்கிய சான்றுகள் கண்டுபிடிக்கப்பட்டன.

இந்த அகழ்வாராய்ச்சியின் போது சீனர்களுக்குச் சொந்தமான பல பீங்கான் பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டமையானது இலங்கைக்கும் சீனாவிற்கும் இடையில் வர்த்தக தொடர்புகள் இடம்பெற்றன என்பதற்கான முக்கிய சான்றாக உள்ளது. சீனாவிற்குச் சொந்தமான பொருள்கள் 11ஆம் நூற்றாண்டின் இரண்டாம் அரை நூற்றாண்டிற்கும் 12 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் உற்பத்தி செய்யப்பட்டுள்ளமையை காணமுடியும்.

இலங்கையில் கண்டெடுக்கப்பட்ட சீன தொல்பொருட்களில் பெரும்பாலானவை சீனாவின் குவாங்டொங் மற்றும் பியூஜியன் மாகாணங்களின் கரையோரங்களில் உற்பத்தி செய்யப்பட்டவை ஆகும்.

இவற்றுள் இனங்காணப்பட்ட தொல்பொருள்களுள் பெரும்பாலானவை குவாங்டொங்கிலுள்ள சயோசௌ மற்றும் ஜிகுன் கில்ன்ஸ் போன்ற இடங்களில் உற்பத்தி செய்யப்பட்டிருந்தன. இவற்றுள் சில வடசீனாவின் ஜவோசௌவ்வில் உற்பத்தி செய்யப்பட்டமையும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கையில் அகழப்பட்ட சீனாவுக்குச் சொந்தமான தொல்பொருள்கள், இலங்கை மற்றும் சீனாவிற்கு இடையிலான கரையோரப் பாதைகள் மற்றும் வர்த்தக வலைப்பின்னலை ஆய்வு செய்வதற்கு நிச்சயம் உதவும்.

கேள்வி: நீங்கள் யாழ்ப்பாணத்தில் பணியை மேற்கொண்டமைக்கான விசேட காரணம் என்ன?

பதில்: யாழ்ப்பாணம், வட இலங்கையின் முக்கிய துறைமுகமாகக் காணப்படுகிறது. இது இந்தியத் துணைக்கண்டத்திற்கு மிக அருகிலுள்ளதுடன் புராதன கடல் பாதைகளுக்கான மைய அமைவிடத்தையும் கொண்டுள்ளது. கடந்த காலத்தில் யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சியின் போது சீனாவில் உற்பத்தி செய்யப்பட்ட பீங்கான்கள் மற்றும் பல்வேறு பொருள்கள் கண்டெடுக்கப்பட்டன. ஆகவே கடந்த கால சீன – சிறிலங்கா உறவை விளங்கிக் கொள்வதற்கு யாழ்ப்பாணம் மிக முக்கிய இடமாக நோக்கப்படுகிறது.

கேள்வி: தொல்பொருள் சான்றுகளை பாதுகாப்பதற்கு இலங்கை மற்றும் சீனா ஆகிய இரு நாடுகளும் எவ்வாறு ஒத்துழைப்பை வழங்கமுடியும்?

பதில்: கலாசார சான்று என்பது புராதன காலத்தில் வாழ்ந்த மனிதர்களால் விட்டுச் செல்லப்பட்ட வரலாற்று பொக்கிசமாகும். புராதன மனித நாகரிகங்களின் உள்ளக உறவுகளை விளங்கிக் கொள்வதற்கு இவ்வாறான வரலாற்றுச் சான்றுகள் முக்கிய மூலவளங்களாக உள்ளன. இவ்வாறான வரலாற்று முக்கியத்துவம் மிக்க விழுமியங்களை ஆய்வின் மூலம் அடையாளம் காண்பது முதன்மையானதாகும்.

நகரக் கட்டுமானம் மற்றும் பொருளாதார அபிவிருத்திச் செயற்பாடுகள் காரணமாக கலாசார சான்றுகள் பல மோசமான ஆபத்திற்கு உள்ளாகியுள்ளன. இவ்வாறான சான்றுகளைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை நாம் தீவிரப்படுத்தாவிட்டால், நாங்கள் அவற்றை இழந்து விடுவோம். அத்துடன் எமது வரலாற்றுச் சான்றுகளும் முற்றாக அழிந்து விடும். ஆகவே, நாம் அனைவரும் இவற்றைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டும்.

அண்மைய ஆண்டுகளில், கலாசார தொல்பொருள்களைப் பாதுகாப்பதற்கான அனுபவங்களை சீனா அதிகம் பெற்றுள்ளது. இது சாத்தியமானால், இவ்விரு நாடுகளும் இணைந்து கலாசார சான்றுகளைப் பாதுகாப்பதற்கும் புராதன மனித நாகரிக சான்றுகளைப் பாதுகாப்பதற்குமான அருங்காட்சியகத்தைப் பேணவேண்டும்.

கேள்வி: தொல்பொருள் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டிய வேறு இடங்கள் எவை?

பதில்: இலங்கை பல்வேறு முக்கிய துறைமுகங்களைக் கொண்ட ஒரு தீவாகும். இங்கு சீனாவின் பட்டுப்பாதையுடன் தொடர்புபட்ட பல எச்சங்கள் காணப்படுகின்றன. கரையோர பட்டுப் பாதையின் எண்ணக்கரு தொடர்பாக கூட்டு தொல்பொருளியல் குழு ஆராய்வதுடன் தொடர்புபட்ட துறைமுகப் பிரதேசங்களில் தொல்பொருள் விசாரணைகள் மற்றும் அகழ்வுகளிலும் ஈடுபடும். யாழ்ப்பாணத்துடன் திருகோணமலை மற்றும் காலி போன்ற துறைமுகப் பகுதிகளும் எதிர்காலத்தில் அகழ்வாராய்ச்சிக்கு உட்படுத்தப்படலாம்.

கேள்வி: – இலங்கை மற்றும் சீனா



விற்கு இடையிலான பௌத்த தொடர்புகளை நீங்கள் எவ்வாறு நோக்குகிறீர்கள்?

பதில்: இலங்கை மற்றும் சீனாவிற்கு இடையிலான தொடர்பானது 2000 ஆண்டுகளுக்கு மேற்பட்டதாகும். இந்த உண்மையானது இலக்கியப் பதிவுகள் மூலம் மட்டுமல்லாது, தொல்பொருளியல் சான்றுகள் மூலமும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. இலங்கையின் துறைமுகங்களில் மட்டுமல்லாது, அநுராதபுரம் மற்றும் பொலனறுவை போன்ற நகரங்களிலும் சீனர்களுக்குச் சொந்தமான பீங்கான் பாத்திரங்கள், நாணயங்கள் மற்றும் கலாசார சான்றுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இவ்வாறான சான்றுகள், புராதான கரையோர பட்டுப்பாதை வர்த்தகத்தில் சீன உற்பத்திப் பொருள்கள் மிகவும் பிரபலமான உற்பத்திப் பொருள்களாகக் காணப்பட்டன என்பதை அல்லது சீனா மற்றும் இலங்கைக்கு இடையிலான உறவானது புராதன காலத்தில் கட்டியெழுப்பப்பட்டது என்பதை உறுதிப்படுத்துகின்றன.

புராதன காலந்தொட்டு இலங்கையின் பௌத்த பாரம்பரியமானது சீன மத எண்ணக்கருக்கள் மீது தாக்கம் செலுத்தியது என்பதை நீண்ட கால வரலாற்று பரிமாற்றங்கள் மூலம் உறுதிப்படுத்தலாம். இலக்கியத்தின் மூலம் பா – ஜியன் என்கின்ற சீன பௌத்தர் போன்று பல பௌத்தர்கள் சீனாவிலிருந்து இலங்கைக்கு வருகை தந்துள்ளனர். அத்துடன் பௌத்த மதத்தை மேம்படுத்துவதற்காக இலங்கை தனது மக்களை சீனாவிற்கு அனுப்பியுள்ளது.

செவ்வி – **Kelum Bandara**
வழிமூலம் – **Dailymirror**
மொழியாக்கம் – நித்தியபாரதி

# வடக்கு மாகாண முன்பள்ளிகளின் கண்காட்சி யாழ்ப்பாணத்தில்







யாழ்ப்பாணம், டிசெ. 15

வடக்கு மாகாண முன்பள்ளிகளின் கண்காட்சியும் கலாசார விழாவும் யாழ்ப்பாண மகளிர் கல்லூரியில் நேற்று முன் தினம் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வட மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே வலயக் கல்வி அலுவலகம் ரீதியாக அமைக்கப்பட்ட கண்காட்சி கூடங்களைத் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலர் எஸ்.சத்தியசீலன், மாகாணக் கல்விப் பணிப்பாளர் உதயகுமார், ஆளுநரின் செயலாளர் இளங்கோவன் உட்பட வட மாகாண முன்பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் கலந்து கொண்டனர். (ஐ)

# மஹிந்தவை நீக்கமுடியாது

## டிலான் கூறுகிறார்

கொழும்பு, டிசெ. 15

மஹிந்த ராஜபக்ஷ தானாகப் பிரதமர் பதவியில் இருந்து விலகினாலே தவிர, அவரைப் பதவியில் இருந்து நீக்கமுடியாது என ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.



நீதிமன்றத் தீர்ப்பினாலேயோ அல்லது நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள் கொண்டு வந்தாலும் கூட மஹிந்தவைப் பிரதமர் பதவியில் இருந்து நீக்கமுடியாது எனவும் அவர் கூறினார்.

ஜனாதிபதியால் நாடாளுமன்றத்தைக் கலைத்தமை தொடர்பிலான உயர்நீதிமன்ற தீர்ப்பைத் தொடர்ந்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு சந்தித்து கலந்துரையாடியது. இந்தச் சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே நாடாளுமன்ற உறுப்பினர் இவ்வாறு கூறினார். (ஐ)

# தேர்தலுக்காக நாங்களும் நீதிமன்றம் செல்வோம்!

## கூறுகிறார் மஹிந்த தேசப்பிரிய

கொழும்பு, டிசெ. 15

அமைச்சரவை மற்றும் நாடாளுமன்றம் ஆகியவற்றின் ஊடாக, மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளவில்லை என்றால் உயர்நீதிமன்றத்தின் ஆலோசனையை பெறவுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டை மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் நாட்டில் எதிர்வரும் இரு ஆண்டுகளில் மூன்று வகையான தேர்தலை நடத்தவேண்டிய தேவை உள்ளதெனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அந்தவகையில், அமைச்சரவையொன்று நாட்டில் இருந்தாலும் இல்லாவிடினும் தேர்தலை நடத்துவதற்கு எந்தவொரு தடையும் இல்லை எனவும் மஹிந்த தேசப்பிரிய சுட்டிக்காட்டினார். (ஐ)



# மைத்திரிக்கு நீதிமன்றம் தக்க பதிலடி வழங்கியது

## பொன்சேகா மகிழ்ச்சி

கொழும்பு, டிசெ. 15

இலங்கையின் நீதித்துறை சுயாதீனமாக இருப்பதை உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு நிரூபித்துள்ளது என ஐக்கிய தேசிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினரான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அரசமைப்புக்கு முரணான நடவடிக்கைகளில் ஈடுபடுவதை இனியாவது நிறுத்த வேண்டும் எனவும் அவர் கூறினார்.



ஜனாதிபதியால் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டமைக்கு எதிராக உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பைத் தொடர்ந்து நீதிமன்ற வளாகத்தில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அரசமைப்புக்கு முரணானசில முடிவுகளை நிறைவேற்ற முயற்சித்தார். ஆனால், உயர்நீதிமன்றம் அவற்றுக்கு எதிராகத் தீர்ப்பளித்துள்ளது. ஜனாதிபதியின் சட்டவிரோத நடவடிக்கைகளுக்கு உயர்நீதிமன்றம் தக்க பதிலடி கொடுத்துள்ளது.

நாடாளுமன்றத்தில் ஐக்கிய தேசிய முன்னணி அதன் பெரும்பான்மையை நிரூபித்துள்ளது. அத்தோடு பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்கவும் நம்பிக்கை வாக்கெடுப்பில் நாடாளுமன்றில் பெரும்பான்மையை நிரூபித்துள்ளார். இந்நிலையில், அரசமைப்பை மீறி செயற்படுத்திய விடயங்களால் ஏற்படுத்தப்பட்ட விளைவுகளை ஜனாதிபதி எதிர்கொள்ளத் தயாராக இருக்க வேண்டும் – என்றார். (ஐ)

# மடுவைப் புனித பிரதேசமாக்கும் ஜனாதிபதியின் முடிவுக்கு எதிர்ப்பு

## மன்னார் மறைமாவட்ட கத்தோலிக்க ஒன்றியம் கண்டனம்

மன்னார், டிசெ. 15

மன்னார், மடு தேவாலயத்தை புனித பிரதேசமாகப் பிரகடனப்படுத்தும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் முடிவு தொடர்பாக, மன்னார் மறைமாவட்ட கத்தோலிக்க ஒன்றியம் கண்டனம் தெரிவித்துள்ளது.

இந்த முயற்சியை உடனடியாக நிறுத்தி, ஜனாதிபதி நேரடி கலந்துரையாடலை மேற்கொண்டு சரியானதொரு தீர்மானத்தை மேற்கொள்ள வேண்டும் என்று மன்னார் மறைமாவட்ட கத்தோலிக்க ஒன்றிய செயலாளர் ஜே.ஜே.கெனடி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

தற்போது 302 ஏக்கர் காணியை மட்டும் புனித பூமியாக பிரகடனப்படுத்தி வெளியிடப்படவிருக்கும் வர்த்தமானி அறிவித்தலின் மாதிரி வரைவு ஒன்று மன்னார் மறைமாவட்ட ஆயர் ஆண்டகைக்கு அனுப்பப்பட்டுள்ளது. இந்த மாதிரி வரைபின்படி தற்போது மடு தேவாலயத்திற்கு உரிய ஏறத்தாழ 5 ஆயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட காணியை புனித பூமி என்ற போர்வையில் 302 ஏக்கருக்குள் மட்டுப்படுத்தப்படும் ஒரு செயலாக கத்தோலிக்க ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

நாளை மன்னார் பொது விளையாட்டரங்கில் நடைபெறவிருக்கின்ற தேசிய நத்தார் தின விழாவில் இது தொடர்பான அறிவித்தலை விடுப்பதற்கு ஜனாதிபதி செயலகத்தினால் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி செயலகத்தின் தன்னிச்சையான நடவடிக்கைகளுக்கும், ஒரு தலைப்பட்சமான முடிவுகளுக்கும் அனைத்து மக்கள் சார்பாகவும் கண்டனத்தை தெரிவிப்பதோடு, ஜனாதிபதி இவ்விடயத்தை உடனடியாக நிறுத்தி, சரியானதொரு முடிவை எமது மக்களுக்கும், மறை மாவட்டத்திற்கும் வழங்க வேண்டும் என கோரிக்கை விடுக்கின்றோம்–என்றுள்ளது. (ஐ)

# மூவின மக்களுக்கும் மைத்திரி துரோகம்

## விஜயகலா குற்றச்சாட்டு



கொழும்பு, டிசெ. 15

நாட்டில் உள்ள மூவின மக்களுக்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன துரோகமிழைத்துள்ளார் என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்தார்.

மீண்டும் பிரதமராக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்பார் என்றும் அவர் கூறினார்.

ஜனாதிபதியால் நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட விதம் அரசமைப்புக்கு முரணானதென உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

அந்தத் தீர்ப்பு அறிவிக்கப்பட்டதன் பின்னர் நீதிமன்ற வளாகத்தில் ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கும்போதே விஜயகலா எம்.பி. மேற்கண்டவாறு கூறினார். (ஐ)

# தங்காலை பிரதேச சபையின் ஐ.தே.க. உறுப்பினர் கைது

கொழும்பு, டிசெ. 15

தங்காலை பிரதேச சபையின், ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினரொருவர் கைது செய்யப்பட்டுள்ளாரென வீரக்கெட்டிய பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸ் அதிகாரியொருவரின் வீட்டின் மீது பட்டாசு கொளுத்தியமையால் ஏற்பட்ட மோதலையடுத்து, பொலிஸ் அதிகாரி உட்பட மூவர் காயமடைந்தனர். இதனையடுத்து சம்பவத்துடன் தொடர்புடைய ஐ.தே.க உறுப்பினரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். (ஐ)




## 2022 உதைபந்து உலகக் கிண்ணம்; அணி எண்ணிக்கை 48 ஆக உயரும்

நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடத்தப்படும் உலகக்கிண்ண உதைபந்து தொடர், எதிர்வரும் 2022ஆம் ஆண்டு கட்டாரில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 2022ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 21ஆம் திகதி முதல் டிசெம்பர் மாதம் 18ஆம் திகதி வரை உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

22ஆவது அத்தியாயமாக நடைபெறும் கட்டார் உதைபந்து உலகக்கிண்ணம், மத்திய கிழக்கு நாடொன்றில் முதன் முறையாக நடைபெறும் முதல் உலகக் கிண்ணத் தொடராகும்.

உதைபந்து உலகக் கிண்ண தொடரானது வழக்கமாக மே, ஜுன், ஜுலை மாதங்களில் இல்லாமல் நவம்பர், டிசெம்பர் மாதங்களில் நடைபெறவுள்ளமை சிறப்பம்சமாகும்.

அத்தோடு இத்தொடரல் 32 அணிகள் பங்கேற்கும் கடைசி உலகக் கிண்ணத் தொடராக அமையும் எனவும். இதில் 64 போட்டிகள் நடைபெறும் எனவும் கூறப்பட்டிருந்தது.

2026ஆம் ஆண்டு அமெரிக்கா, கனடா மற்றும் மெக்ஸிக்கோ ஆகிய நாடுகள் இணைந்து நடத்தவுள்ள உலகக் கிண்ண உதைபந்து தொடரில் அணிகளின் பங்கேற்பை 48 ஆக உயர்த்துவதற்கு பிபா ஏற்கனவே அனுமதியை வழங்கியிருந்தது.

இதற்கிடையில், கட்டார் உதைபந்து உலகக்கிண்ணத் தொடரிலேயே அணிகளின் பங்கேற்பை 48 ஆக உயர்த்துவதற்கு யோசனைகள் முன்வைக்கப்பட்டன. இதற்கு பல்வேறு நாடுகளிலும் உள்ள உதைபந்துக் கூட்டமைப்புகளிடம் அனுமதி கோரப்பட்டிருந்தது.

இந்த நிலையில், எதிர்வரும் 2020ஆம் ஆண்டு கட்டாரில் நடைபெறவுள்ள உலகக்கிண்ண உதைபந்துத் தொடரில், அணிகளின் எண்ணிக்கையை 48இற்கு உயர்த்துவதற்கு உதைபந்து கூட்டமைப்புகள் இணங்கியுள் ளதாக சர்வதேச உதைபந்து சம்மேளனத்தின் தலைவர் ஜியனி இன்பன்டினோ, தெரிவித்துள்ளார்.

இந்த போட்டியை விரிவுபடுத்துவது சாத்தியமா என்பது தெளிவாக கூறமுடியாது. எனினும் இதற்கான உத்தியோகபூர்வ முடிவு எதிர்வரும் மார்ச் மாதம் அறிவிக்கப்படும் என அவர் கூறியுள்ளார்.

இத்தொடருக்கான தகுதிகாண் போட்டிகள் கோடைக் காலத்தில் ஆரம்பமாவதால், இதன் பின்னர் அணிகளின் எண்ணிக்கையை 16ஆல் உயர்த்துவது குறித்து தீர்மானிக்கப்படவுள்ளது.

இதற்கிடையில், இத்தொடரை நடத்துவதற்கான உதைபந்து விளையாட்டு அரங்குகளின் நிர்மாணப் பணிகளை, கட்டார் அரசு தீவிரமாக முன்னெடுத்து வருகின்றது.

இதற்கிடையில், அசுர வேகத்தில் நடைபெற்றுவரும் நிர்மாணப் பணிகள் எதிர்வரும் 2021ஆம் ஆண்டு நிறைவுக்கு வருமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நியூசிலாந்து மண்ணில் சாதிக்குமா இலங்கை?

நியூசிலாந்துக்கு கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை கிரிக்கெட் அணி, மூன்று வகை கிரிக்கெட் போட்டிகளிலும் விளையாடவுள்ளது. இந்தச் சுற்றுப் பயணத்தில் இலங்கை அணி, 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர், 3 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடர், ஒரேயொரு ரி-20 போட்டியில் விளையாடவுள்ளது.

இந்நிலையில் இந்தத் தொடரின் முதலாவது டெஸ்ட் போட்டி இன்று வெலிங்டனில் ஆரம்பமாகவுள்ளது. இதற்கிடையில் இப்போட்டிக்காக இரு அணிகளும் தங்களைத் தீவிரமாக தயார்ப்படுத்தி வருகின்றன.

இந்த போட்டியை பொறுத்தவரை இலங்கை அணிக்கு இப்போட்டி மிக முக்கியமானதொரு போட்டியாக அமையவுள்ளது.

இதற்கு முன்னதாக இலங்கை அணி, கடந்த 2012ஆம் ஆண்டுக்கு பிறகு நியூசிலாந்து அணியுடன் வெற்றி எதனையும் பதிவு செய்யவில்லை. ஆகையால், ஆறு வருடங்களுக்கு பிறகு வெற்றியொன்றை பதிவு செய்யும் ஆர்வத்துடன், இலங்கை அணி உள்ளது.

நேப்பியார் நகரில் வைத்து 1995 ஆம் ஆண்டு நடைபெற்ற டெஸ்ட் போட்டி ஒன்றில் இலங்கை கிரிக்கெட் அணி நியூசிலாந்தை தோற்கடித்து நியூசிலாந்து மண்ணில் முதல் டெஸ்ட் வெற்றியினை பதிவு செய்திருந்தது.

இதேநேரம், நியூசிலாந்தில் 2015/16ஆம் ஆண்டு பருவ காலத்தில் இரு அணிகளுக்கும் இடையே இறுதியாக நடைபெற்று முடிந்த இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை, நியூசிலாந்து அணி முழுமையாக கைப்பற்றியிருந்தது.

ஆகையால் அதற்கு பழி தீர்க்கும் வகையிலும், ஆறு வருடங்களுக்கு பிறகு வெற்றியொன்றை பதிவு செய்யும் முனைப்புடனும், இலங்கை அணி உள்ளது.

இரு அணிகளுக்குமிடையில் இதுவரை 32 டெஸ்ட் போட்டிகள் நடைபெற்றுள்ளன. இதில் 14போட்டிகளில் நியூசிலாந்து அணியும், இலங்கை 8 போட்டிகளும் வெற்றிப் பெற்றுள்ளன. 10போட்டிகள் சம நிலையில் முடிவடைந்துள்ளன.

இரு அணிகளுக்கிடையிலான டெஸ்ட் தொடரை ஒப்பிட்டு பார்க்கும் போது, அதில் நியூசிலாந்து அணியே ஆதிக்கம் செலுத்தியுள்ளது. தற்போது சொந்த மண்ணில் இங்கிலாந்திடம் அவமானத் தோல்வியை சந்தித்த விரக்தியிலுள்ள இலங்கை அணி, நியூசிலாந்து அணியுடனான பயிற்சி போட்டிகளில் சிறந்த முறையில் விளையாடியுள்ளது.

ஆகையால், இலங்கை அணி நியூசிலாந்து மண்ணில் வெற்றிபெறுவது கடினமாக அமைந்தாலும், நிச்சயம் கடும் நெருக்கடி கொடுக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

100 நாள்கள் கொண்டதாக வெளிநாட்டு மண்ணில் நடைபெறுகின்ற 3 கிரிக்கெட் தொடர்களில் நியூசிலாந்து அணியுடனான தொடரை தொடங்குகிறது. இலங்கை அணி, ஆஸ்ரேலியா மற்றும் தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளுக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடவுள்ளது.

## டோனி குறித்து மனம் திறந்தார் ரிஷப் பந்த்




இந்தியக் கிரிக்கெட் அணியின் மகத்தான வீரரான மகேந்திர சிங் டோனி, எங்கள் அருகே இருந்தால், மிகுந்த நம்பிக்கையாக உணர்வேன் என்று இந்திய அணியின் விக்கெட் காப்பாளர் ரிஷப் பந்த் கூறியுள்ளார்.

அடிலெய்டில் நடைபெற்ற ஆஸ்திரேலியா அணிக்கெதிரான முதல் டெஸ்ட் போட்டியில் ரிஷப் பந்த், 11 பிடியெடுப்புக்களை எடுத்து, ஒரு டெஸ்ட் போட்டியில் அதிக பிடியெடுப்புக்கள் எடுத்த வீரர்கள் பட்டியலில் முன்னாள் வீரர்களான ஜேக்ரல், ஏபி டிவில்லியர்ஸ் ஆகியோருடன் இணைந்துள்ளார்.

இந்த நிலையில் அவருக்கு பல்வேறு தரப்பில் இருந்து பாராட்டுக்கள் குவிந்த வண்ணமுள்ளன. இதற்கிடையில் இந்தச் சாதனைக் குறித்து ரிஷப் பந்த் கூறுகையில்,

எனக்கு விக்கெட் காப்பாளர் பணியில் பல்வேறு விடயங்களைக் கற்றுக் கொடுத்தவர் எம்.எஸ்.டோனி தான். பல்வேறு விக்கெட் காப்பாளர்கள் அணியில் உருவாகவும் டோனி தான் காரணமாக இருந்தார். டோனி எங்கள் நாட்டின் ஹீரோ.

டோனியிடம் இருந்து கிரிக்கெட் வீரராக, தனி மனிதராக ஏராளமான விடயங்களை நான் கற்றுக்கொண்டிருக்கிறேன். எப்போதெல்லாம் டோனி எங்களுடன் இருக்கிறாரோ அப்போது மிகவும் நம்பிக்கை உடையவனாக நான் உணர்வேன். எனக்கு எந்தவிதமான பிரச்சினைகள் இருந்தாலும், அதை டோனியிடம் கூறி, அதற்கு சரியான தீர்வும் காண்பேன். ஒரு விக்கெட் காப்பாளராகவும், தனி மனிதராகவும் டோனி எனக்கு அதிகமான விடயங்களைக் கற்றுக் கொடுத்து இருக்கிறார்.

கடினமான, நெருக்கடியான சூழல்களில் எப்படி நடந்து கொள்ள வேண்டும், பொறுமையை எப்படி கடைப்பிடிக்க வேண்டும் என்பதை எனக்குக் கற்றுக் கொடுத்துள்ளார். நெருக்கடியான நேரத்தில் அமைதியாக இருந்து, 100 சதவீதம் முயற்சிக்க வேண்டும் என எனக்கு டோனி அறிவுறுத்தியுள்ளார். அடிலெய்ட் டெஸ்டில் இப்படி ஒரு சாதனையை நான் நிகழ்த்துவேன் என்று நினைக்கவில்லை. ஆனால், சில நல்ல பிடியெடுப்புக்களை பிடித்திருக்கிறேன்' என கூறியுள்ளார். (ஐ)

## 2020 ஆசியக் கிண்ணத் தொடரை நடத்தும் உரிமை பாகிஸ்தானுக்கு



சொந்த மைதானத்தில் இதுவரை சர்வதேச கிரிக்கெட் போட்டிகளை நடத்துவதில் பெரும் சவாலை எதிர்கொண்டு வந்த பாகிஸ்தானுக்கு முதல் வெற்றி கிடைத்துள்ளது.

இலங்கை கிரிக்கெட் வீரர்கள் மீதான தீவிரவாத தாக்குதலை தொடர்ந்து, சர்வதேச கிரிக்கெட் அணிகள், பாகிஸ்தான் சென்று விளையாட அச்சம் காட்டி வந்தன.

இவ்வாறு சர்வதேச கிரிக்கெட் அணிகள் காட்டிய தயக்கத்தினால், பாகிஸ்தான் கிரிக்கெட் சபைக்கு மிகப்பெரிய நட்டம் ஏற்பட்டது.

இதனை சிறிதளவேனும் ஈடுகட்டுவதற்காக பாகிஸ்தான், தங்கள் அணி விளையாடும் போட்டிகளை ஐக்கிய அரபு இராச்சியத்தில் இதுவரை காலமும் நடத்தி வந்தது.

அத்தோடு அந்நாட்டுக்கே தனித்துவமான பாகிஸ்தான் சுப்பர் லீக் ரி-20 தொடரிலும் வருமானம் ஈட்டி வந்தது.

இந்த நிலையில் மிகப்பெரிய தொடரான ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் தொடரை நடத்துவதற்கான வாய்ப்பை பாகிஸ்தான் பெற்றுள்ளது.

இதற்கமைய எதிர்வரும் 2020ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஆசியக் கிண்ண ரி-20 தொடரை நடத்தும் உரிமையை பாகிஸ்தான் பெற்றுள்ளது. எனினும், போட்டிகள் எங்கு நடைபெறும் என்பது தெரிவிக்கப்படவில்லை.

இறுதியாக நடைபெற்ற ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் தொடர், ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெற்றது. இதில் இந்திய அணி சம்பியன் பட்டம் வென்றது.

இந்த தொடர் இந்தியாவில்தான் நடைபெறுவதாக இருந்தது. அப்போது பாகிஸ்தான் இந்தியா வர மறுப்பு தெரிவித்ததால் இடம் மாற்றப்பட்டது.

தற்போது பாகிஸ்தானில் ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் நடைபெற விருப்பதால், இந்தியாவும் இதற்கு மறுப்பு தெரிவிக்கும் என கூறப்படுகின்றது.

அவ்வாறு மறுப்பு கூறும் பட்சத்தில், ஆசியக் கிண்ணத் தொடர் இலங்கை அல்லது பங்களாதேஷில் நடைபெறுவதற்கான வாய்ப்புகள் உள்ளன.

ஆசியக் கிண்ணத் தொடர் 2020ஆம் ஆண்டு ஆஸ்திரேலியாவில் நடைபெறும் ரி-20 உலகக் கிண்ணத் தொடருக்கு முன் நடைபெற இருக்கிறது. 50 ஓவர் கிரிக்கெட் தொடராக இருந்த ஆசியக் கிண்ண தொடர் தற்போது 20 ஓவர்களாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால், ரி-20 உலகக் கிண்ணத் தொடருக்கு ஆசியக் கிண்ண தொடர் ஒரு முன்னோட்ட தொடராக அமையும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

ஆகையால் இத்தொடரில் விளையாட ஆசிய அணிகள் ஆர்வம் காட்டும். எனவே 2020ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஆசியக் கிண்ண ரி-20 கிரிக்கெட் தொடர், இரத்து செய்யப்படுவதற்கான வாய்ப்புகள் இல்லை.

## அமைச்சரவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மஹிந்த தரப்பினரால் தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணை நேற்றுக் காலை உயர்நீதிமன்றத்தில் ஆரம்பமானது.

முதலில் இந்த மேன்முறையீட்டு மனுவை, உயர்நீதிமன்றத்தின் ஐந்து நீதியரசர்களைக் குழாமே விசாரிக்கவேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க சார்பில், அவரது சட்டத்தரணிகளால் தாக்கல் செய்யப்பட்ட நகர்த்தல் மனு பரிசீலிக்கப்பட்டு அந்த மனு நிராகரிக்கப்பட்டது.

உயர்நீதிமன்றத்தின் நீதியரசர்களான ஈவா வனசுந்தர, புவனேக அலுவிகார, விஜித மலல்கொட ஆகியோரைக் கொண்ட மூன்று நீதியரசர்கள் குழாமே இந்த மேன்முறையீட்டு மனுவை விசாரிக்கும் என்றும் அறிவிக்கப்பட்டது.

நீதியரசர் ஈவா வனசுந்தர, மஹிந்த ராஜபக்ஷவுக்கு நெருக்கமானவர் என்பதால், இந்த மனுவை நீதியரசர் ஈவா வணசுந்தர விசாரிக்கக் கூடாது என்ற கோரிக்கையும் நிராகரிக்கப்பட்டது.

இந்த மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, நீதியரசர் ஈவா வனசுந்தர நேற்றுடன் ஓய்வுபெறும் அறிவிப்பை நீதியரசர் புவனேக அலுவிகார வெளியிட்டார். அவர் விசாரித்து தீர்ப்பளிக்கும் கடைசி மனு இதுவே என்றும் அவர் கூறினார்.

இதையடுத்து, நேற்றுக் காலை தொடக்கம் மாலை வரை மஹிந்த தரப்பின் மேன்முறையீட்டு மனு மீது விசாரணைகள் நடத்தப்பட்டன.

இதன் முடிவில் நேற்று மாலை தமது தீர்ப்பை மூன்று நீதியரசர்கள் குழாமும் அறிவித்தது.

இதன்படி, மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் இடைக்கால உத்தரவை நீக்க முடியாது என்று மூன்று நீதியரசர்களும் ஏகமனதாக அறிவித்தனர்.

இந்தமனுவைப் பெரும்பான்மை நீதிபதிகளின் தீர்மானத்தின்படி விசாரிப்பதற்கு அனுமதி வழங்கிய மூன்று நீதியரசர்களும், அதனை எதிர்வரும் ஜனவரி 16, 17 மற்றும் 18ஆம் திகதிகளில் விசாரிக்க உத்தரவிட்டனர். மேன்முறையீடு தொடர்பில் இறுதித் தீர்ப்பு வழங்கும் வரை மேன்முறையீட்டு நீதிமன்றால் பிறப்பிக்கப்பட்ட இடைக்காலத் தடை உத்தரவு அமுலில் இருக்கும் எனவும் அவர்கள் அறிவித்தனர்.

அத்துடன், உயர்நீதிமன்றத்தில் நடைபெறும் மேன்முறையீட்டு மனு மீதான விசாரணை நிறைவடையும் வரை, இது சம்பந்தமாக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் இடம்பெறும் வழக்கை இடைநிறுத்துவதற்கும் அவர்கள் உத்தரவிட்டனர். (ஐ)

## மைத்திரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஹிட்லரைப் போன்று செயற்பட முடியாது. உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை அனைவரும் மதிக்க வேண்டும். இதற்கு மஹிந்த ராஜபக்ஷவின் தரப்பினர் மாத்திரம் விதிவிலக்கல்ல என நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்–

நாங்கள் தற்போது எதிர்த்தரப்பினராகச் செயற்படுவதே சிறப்பானதாகும். இடைக்கால அரசைப் பொறுப்பேற்று மஹிந்த ராஜபக்ஷ தவறு இழைத்து விட்டார் என்பதைப் பலமுறை எடுத்துரைத்தும், சில பதவி மோகம் கொண்டவர்களினால் எமது கருத்து மதிப்பிழக்கப்பட்டது. இனியாவது மஹிந்த அரசியல் ரீதியில் சிறந்த தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டும் – என்றார். (ஐ)

## இறங்கி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றத்தைக் கலைக்கும் ஜனாதிபதியின் வர்த்தகமானி அறிவித்தல் அரசமைப்புக்கு முற்றிலும் முரணானது என உயர்நீதிமன்றம் நேற்று முன்தினம் ஏகமனதாக அதிரடித் தீர்ப்பு வழங்கியமையை அடுத்து, அன்றிரவு, ரணில் விக்கிரமசிங்கவுடன் சபாநாயகர் கரு ஜெயசூரிய சென்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்தார் எனத் தெரியவருகின்றது.

சுமார் பத்து நிமிட நேரமே இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

அரசியல் ரீதியாக முரண்பட்டு நிற்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும், ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையிலான சமாதானத் தரகராக சபாநாயகர் கரு ஜெயசூரியவே செயற்பட்டார்.

இந்தச் சந்திப்பின் போதே நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையினரின் ஆதரவைப் பெற்ற ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக நியமிப்பதற்கு ஜனாதிபதி இணங்கினார் எனத் தெரிவிக்கப்பட்டது.

புதிய அமைச்சரவையில் தமது சுதந்திரக் கட்சியினரும் சேர்க்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை ரணில் ஏற்றுக் கொண்டார் என்றும் தெரிகின்றது.

எனினும், முதலில் பிரதமராக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றுக் கொண்டால்தான், அதனடிப்படையில் புதிய அமைச்சரவை குறித்து ஜனாதிபதியுடன் கலந்தாலோசிக்கும் நிலைமை அவருக்கு வரும் என சபாநாயகர் சுட்டிக்காட்டினார் என்றும் –

அதனை ஏற்றுக் கொண்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அடுத்து வரும் நாள்களில் ரணில் விக்கிரமசிங்கவைப் பிரதமராக நியமித்து, அவருக்குப் பதவிப் பிரமாணம் செய்து வைத்த பின்னர் புதிய அமைச்சரவை குறித்து அவருடன் கலந்துரையாடித் தீர்மானம் மேற்கொள்ள இணங்கினார் என்றும் கூறப்பட்டது. (உ)

## ஐக்கிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளிறேவேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி வலியுறுத்தியுள்ளது.

அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார, அலரி மாளிகையில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

அரசமைப்பின் மீயுயர்தன்மை மீண்டும் நிலைநாட்டப்பட்டது. இதனை எம்மால் செய்துகொள்ள முடியாமல் போயிருந்தால் சூழ்ச்சி மிக்க ஓர் அரசு உருவாகியிருக்கும்.

அவ்வாறான ஓர் அரசு உருவாகியிருக்குமானால் அதனை மாற்ற முடியாமல் போயிருக்கும். 19 ஆவது அரசமைப்புக்கு அமைய நான்கரை வருடங்களுக்கு அரசைக் கலைக்க முடியாது என நீதிமன்றம் ஏற்றுக் கொண்டுள்ளது.

குறிப்பாக தேர்தலை உரிய காலத்தில் நடத்தவேண்டும் என்பதே தீர்ப்பு. மாறாக ரணிலைப் பிரதமராக நியமிக்கவேண்டும் எனத் தீர்ப்பளிக்கவில்லை.

எனவே நீதிமன்றத்துக்கு எதிரான கருத்துகளைத் தெரிவிக்க வேண்டாம். தற்போது கம்பன்பில, விமல் வீரவன்ஸ, தினேஷ் குணவர்தன போன்றோர் இது குறித்து தெரிவித்த கருத்துக்கள் தொடர்பில் தற்போது நாம் ஆராய்ந்து வருகின்றோம்.

அவர்களின் கருத்து நீதிமன்றத்துக்கு எதிரானதாக இருந்தால் அது தொடர்பில் செயற்பட நாம் தயார் – என்றார். (ஐ)

## 'கை' - 'மொட்டு'...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)'

"எமது கட்சியின் அரசியல் பயணம் குறித்து, ஏனைய கட்சியின் உறுப்பினர்கள் கருத்துக் கூற முடியாது" – என்ற சுதந்திரக் கட்சியின் அறிவிப்பின் ஊடாக இது உறுதியாகியுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் எம்.பிக்களுக்கும் இடையே நேற்று முன்தினம் மாலை முக்கியத்துவமிக்க சந்திப்பு நடைபெற்றது.

இந்தச் சந்திப்பின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன –

பதவி பறிபோனால் கூட ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக நியமிக்கமாட்டேன் என ஜனாதிபதி திட்டவட்டமாக அறிவித்தார். ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சியமைக்கக் கூடாது என்றும் சுட்டிக்காட்டினார் என்று குறிப்பிட்டார். அத்துடன், சுதந்திரக் கட்சி தொடர்பிலும் சில கருத்துகளை முன்வைத்திருந்தார்.

இந்நிலையிலேயே, இதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் சுதந்திரக் கட்சியின் ஊடகப் பேச்சாளரான மஹிந்த சமரசிங்க நேற்று விசேட அறிக்கையொன்றை விடுத்துள்ளார்.

அந்த அறிக்கையில், "ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் எதிர்கால அரசியல் பயணம் தொடர்பில் எமது கட்சி அல்லாத உறுப்பினர்கள் சிலரால் நேற்று முன்தினம் ஊடகங்களிடம் கருத்து வெளியிடப்பட்டுள்ளது. கட்சிக்கு எவ்வித அறிவித்தலையும் விடுக்காது தெரிவிக்கப்பட்ட மேற்படி கருத்துகளை ஏற்கமுடியாது.

கட்சியின் எதிர்கால அரசியல் பயணம் தொடர்பில் மத்திய குழு மற்றும் தலைமைப்பீடத்தால் எடுக்கப்படும் முடிவுகள் உரிய வகையில் ஊடகங்களுக்கு அறிவிக்கப்படும்" – என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

சு.கவின் உறுப்பினராக இருந்த லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன, அண்மையில் மஹிந்த தலைமையிலான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் உறுப்புரிமையைப் பெற்றுக்கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, சுதந்திரக் கட்சியின் ஒரு குழுவினர், ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியமைக்க ஆதரவளிக்கத் தீர்மானித்துள்ளனர் எனக் கூறப்படும் நிலையில் இவ்வாறானதொரு அறிக்கை வெளியாகியுள்ளமை அரசியல் களத்தை மீண்டும் சூடுபிடிக்க வைத்துள்ளது. (ஐ)

## பச்சிலைப்பள்ளி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துள்ளது.

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் 2019ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டம் மக்கள் பார்வையின் பின்னர் நேற்று விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. பிரதேச சபையின் தவிசாளர் சு.சுரேன், வரவு – செலவுத் திட்டத்தைச் சபையில் சமர்ப்பித்திருந்தார்.

இதற்கு, ஆதரவாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 6 உறுப்பினர்கள் மட்டுமே வாக்களித்தனர். ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி, சுயேச்சைக் குழு, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகியவற்றின் 7 உறுப்பினர்கள் எதிர்த்து வாக்களித்தனர். இதனால் பச்சிளைப்பள்ளி பிரதேச சபையின் 2019 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டம் தோல்வியடைந்தது. (ஐ)

## ராஜதந்திர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

சிங்கள குடியேற்றம் தொடர்பில் அந்தந்த காலங்களில் இருந்த ஆட்சியாளர்களிடம் தொடர்ந்தும் வினவப்பட்டது. இன்று அவருக்கு வழங்கப்பட்ட ஆதரவின் ஊடாகச் சிங்கள குடியேற்றத்தை நிறுத்தியுள்ளோம்.

அரசியல் ரீதியில் இராஜதந்திர அரசியலை நாம் பின்பற்றுகின்றோமேயன்றி இப்போதும் அரசின் செயற்பாடுகளை விமர்சித்துக்கொண்டுதான் உள்ளோம். அரசினால் பல விடயங்கள் நிறைவேற்றப்படவேண்டி உள்ளன. அரசு அதை செய்யத் தவறினால் அதற்கு மாற்று விடயங்களைக் கையாளக்கூடிய வழிகள் எம்மிடம் உள்ளன.

நாம் மக்கள் நலன் சார்ந்தே இவ்வாறு செயற்பட்டோம். இதன்மூலம் பல விடயங்களைச் சாதிக்கலாம் என எண்ணியே நாம் ஆதரவளித்துள்ளோம். கடந்த காலங்களில் நாம் தனியே ரணில் விக்கிரமசிங்கவை மாத்திரம் ஆதரித்திருக்கவில்லை. மைத்திரிபால சிறிசேனவையையும் நாம் ஆதரித்திருந்தோம்.

அவருக்கான ஒத்தாசை பலவற்றையும் வழங்கியிருந்தோம். மக்களின் அபிலாசைகளுக்கான தீர்வு, காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான தீர்வு, அரசியல் கைதிகளை விடுதலை செய்தல், இராணுவத்திடம் உள்ள காணிகளை உடன் விடுவித்தல் உள்ளிட்ட விடயங்களில் நாம் தெளிவாக உள்ளோம். அதை அடைவதற்கு நாம் முழுமையாக செயற்படுவோம்.

வடக்குக்கு அபிவிருத்தி அமைச்சராக எவரும் நியமிக்கப்பட்டதாக எதுவும் இல்லை. அவரது காலத்தில் வடக்கில் எதுவும் நடக்கவில்லை. அவர்களால் மக்களுக்கான எதுவும் செய்யப்படவில்லை என்பதை இன்றும் சுட்டிக்காட்டுகின்றோம்.

அவர்கள் தமது கட்சியை வளர்த்தார்களே அல்லாமல் தமிழ் மக்களின் தேவைகள், அவர்களின் அபிலாஷைகளை நிவர்த்தி செய்வதில் அவர்கள் செயற்படவில்லை – என்றார். (ஐ)

## மஹிந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மஹிந்த ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் நேற்றுக் கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

ஜனாதிபதியுடன் இடம்பெற்ற சந்திப்பில் பங்கேற்ற பின்னர் ஊடகவியலாளர்களிடம் கருத்து வெளியிட்ட லக்ஷ்மன் யாப்பா–

தற்போது பிரதமராக இருக்கும் மஹிந்த ராஜபக்ஷ நாளைய தினம்(இன்று) தனது பதவியில் இருந்து ராஜினாமா செய்யாவிடின் எவரையும் பிரதமர் பதவியில் இருத்த முடியாது. நாட்டில் வரவு – செலவு திட்டம் ஒன்றைச் சமர்பிக்காமல் அடுத்த வருடத்தை எதிர்கொள்வது கடினம்.

இதனை கருத்தில் கொண்டு நாளை(இன்று) விசேட அறிவிப்பு ஒன்றை விடுத்து பிரதமர் பதவியை ராஜினாமா செய்யப் போவதாக மஹிந்த தீர்மானித்துள்ளார்.

அப்படிச் செய்தால் அமைச்சரவை கலையும். அப்படியானால் விரும்பிய அமைச்சரவையை ஜனாதிபதி நியமிக்கலாம். நீதிமன்றம் வழக்கை ஒத்திவைத்துள்ளதால் எமக்கு எதனையும் செய்ய முடியவில்லை.

ஆகவே நாட்டின் ஸ்திரத்தன்மையை பேணுவதற்காக மஹிந்த பதவியை ராஜினாமா செய்யவுள்ள தீர்மானித்துள்ளார். எனவே நாம் எதிர்க்கட்சியில் அமர்ந்துகொண்டு போராட எதிர்பார்கின்றோம். எனவே ஜனாதிபதிக்கு விரும்பியவரை பிரதமராக நியமிக்கலாம் – என்றார். (ஐ)

## இன்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாப்பா அபேவர்தன உறுதிப்படுத்தினார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி எம்.பிக்களுக்குமிடையிலான சந்திப்பு நேற்று மாலை ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது. மஹிந்த ராஜபக்ஷவும் இதில் பங்கேற்றிருந்தார்.

இதன்போது சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது. குறிப்பாக நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை ஆதரவைக் கொண்டுள்ள ஐக்கிய தேசிய முன்னணிக்கு ஆட்சியமைப்பதற்குரிய அனுமதியை வழங்கத் தீர்மானிக்கப்பட்டது.

மஹிந்த ராஜபக்ஷ பிரதமர் பதவியை இராஜினாமா செய்தால், ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட அமைச்சரவையும் கலைந்துவிடும். அதன் பின்னர் நாடாளுமன்றத்தில் நம்பிக்கையை வென்ற ஒருவரை பிரதமராக நியமித்து, புதிய அமைச்சரவையை ஜனாதிபதி நியமிக்கவேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

நாட்டின் உறுதிநிலையை உறுதிப்படுத்துவதற்காகவே மஹிந்த ராஜபக்ஷ மேற்படி முடிவை எடுத்தார் என்று நாமல் ராஜபக்ஷ டுவிட்டர் பதிவில் கூறியுள்ளார்.

கடந்த ஒக்டோபர் மாதம் 26 ஆம் திகதி மஹிந்த ராஜபக்ஷவை, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பிரதமராக நியமித்தார். (ஐ)

## நிழல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இல்லை என மஹிந்த தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

மஹிந்த அணியினரால் நேற்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விசேட ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனைத் தோற்கடித்து நாட்டை மீட்ட மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராகவே அனைவரும் செயற்பட்டு வருகின்றனர். தற்போது பிரபாகரனுக்கு பதிலாகச் சுமந்திரன் தலைமையிலான அணியினர் செயற்பட்டு வருகின்றனர். ஐக்கிய தேசியக் கட்சியைப் பின்னிருந்து சுமந்திரனே இயக்குகின்றார். இவ்வாறு சுமந்திரன் தலைமையில் இயங்கும் அணியிடமும், நிழல் பிரதமராகச் செயற்படும் சம்பந்தனிடமும் நாட்டைக் கையளிப்பதற்கு நாம் தயாராக இல்லை.

உயர்நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட தீர்ப்புக்கு நாங்கள் மதிப்பளிக்கின்றோம். ஆனாலும் இலஞ்சம் பெற்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ள நாடாளுமன்றத்தைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல முடியாது. தேர்தலை நடத்தும் பொறுப்புள்ள சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழுவும் சர்வதேச நாடுகள் மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களின் தேவைகளுக்கு ஏற்பவே செயற்பட்டு வருகின்றன. உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பின் ஊடாக மக்களின் வாக்களிக்கும் உரிமையைப் பறித்துவிட்டு, அதனை ஜனநாயகத்துக்குக் கிடைத்த வெற்றி என்கின்றார்கள் – என்றார். (ஐ)





IBC தமிழ் தொலைக்காட்சி நடாத்திய நாட்டியத் தாரகை நடனக்கலைப் போட்டி நிகழ்ச்சியில், சுவிற்சர்லாந்தைச் சேர்ந்த மிதுஜா அமிர்தலிங்கம் வெற்றி பெற்றுள்ளார்.

கடந்த 08ஆம் திகதி சுவிற்சர்லாந்து 'போரம் பிரைபோர்க்' மண்டபத்தில் நடைபெற்ற IBC தமிழா பிரம்மாண்ட நிகழ்ச்சியில் சர்வதேச நடுவர்கள் முன்னிலையில் தமது திறமைகளை நிரூபித்த ஐந்து போட்டியாளர்கள் மத்தியில் இருந்து மிதுஜா வெற்றியாளராகத் தெரிவுசெய்யப்பட்டார்.

IBCதமிழ் நிறுவனத் தலைவர் கந்தையா பாஸ்கரன் மற்றும் திருமதி வைதேகி பாஸ்கரன் ஆகியோர் ஒரு கிலோ தங்கத்தினாலான கிரீடத்தை வெற்றியாளருக்கு சூடியிருந்தார்கள்.

இந்தப் போட்டியின் இறுதிச் சுற்றில் பங்கு பற்றிய மற்றைய நான்கு போட்டியாளர்களுக்கும் தங்கம் பரிசுகளாக வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் பட்டமளிப்பு இன்று

யாழ்ப்பாணம், டிசெ. 15

அகில இலங்கை சைவப்புலவர் சங்கம் நடத்தும் 58 ஆவது பட்டமளிப்பு விழாவும் சைவமாநாடும் இன்று சனிக்கிழமை வண்ணை நாவலர் மகாவித்தியாலய மண்டபத்தில் அகில இலங்கை சைவப்புலவர் சங்கத் தலைவர் சைவப்புலவர் மு.திருஞானசம்பந்தபிள்ளை தலைமையில் நல்லை ஆதீன இரண்டாவது குரு மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள் திரு முன்னிலையில் இடம்பெறவுள்ளன.

நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து நாகரீகத்துறைத் தலைவர் கலாநிதி சுகந்தினி சிறிமுரளிதரனும், சிறப்பு விருந்தினர்களாக சிவஸ்ரீ து.கு.ஜெதீஸ்வரக்குருக்கள், சிவஸ்ரீ மு.பாஸ்கரக்குருக்கள் (ரவி), கலாநிதி விக்கினேஸ்வரி பவநேசன் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக ச.விநாயகமூர்த்தி (கரவெட்டி), ச.தட்சணாமூர்த்தி (மீசாலை), திருமதி புனிதவதியார் சிவக்கொழுந்து (வவுனியா) ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

வரவேற்புரையை சைவப்புலவர் சா.பொன்னுத்துரையும், ஆசியுரையை சிவஸ்ரீ து.ஜெகதீஸ்வரக் குருக்களும், அருளுரையை ஸ்ரீலஸ்ரீ சுவாமிகளும், சிறப்புரையைச் செந்தமிழ்ச்செல்வர் ச.விநாயகமூர்த்தியும் ஆற்றவுள்ளார்கள்.

சைவநாதம் 8 மலர் வெளியீட்டில் வெளியீட்டுரையினை சைவப்புலவர் சி.கா.கமலநாதனும், நயப்புரையினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சைவசித்தாந்த முதுகலைமாணி இணைப்பாளர் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி விக்கினேஸ்வரி பவநேசனும் வழங்கவுள்ளனர். (ஐ)

# சரத் என். சில்வாவுக்கு எதிராக மனுத் தாக்கல்

கொழும்பு, டிசெ. 15

முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என். சில்வாவுக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அவர் நீதிமன்றத்தை அவமதித்துள்ளார் எனக் குற்றம் சுமத்தியே நேற்று வெள்ளிக்கிழமை இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

நாட்டில் அடுத்தடுத்து பல முக்கிய அரசியல் மாற்றங்கள் இடம்பெற்றுவரும் நிலையிலேயே இந்த வழங்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என். சில்வா, முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவுக்கு மிகவும் நெருக்கமானவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# அன்ரன் பாலசிங்கத்தின் நினைவு நேற்று யாழ்.பல்கலைக்கழகத்தில்





யாழ்ப்பாணம், டிசெ. 15

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்தின் 12 ஆம் ஆண்டு நினைவு தினம் யாழ் பல்கலைக் கழகத்தில் நேற்று நடைபெற்றது.

யாழ். பல்கலைக்கழக சமூகத்தின் ஏற்பாட்டில் பல்கலைக்கழக கைலாசபதி கலை யரங்கில் நேற்று மாலை இந்த நினைவேந்தல் நடைபெற்றது.

மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்தின் 12 ஆம் ஆண்டு நினைவு நாள் நேற்று தாயகத்திலும் வெளிநாடுகளிலும் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# சிறுபிள்ளை போல் மைத்திரி நடப்பதை ஏற்கவேமுடியாது

## கூறுகின்றது ஐக்கிய தேசிய கட்சி

கொழும்பு, டிசெ. 15

ஜனாதிபதி ஆசனத்தில் அமர்ந்துகொண்டு மைத்திரிபால சிறிசேன சிறுபிள்ளை போல் செயற்படுகின்றமையை ஏற்றுக் கொள்ள முடியாது என ஐக்கிய தேசிய கட்சி தெரிவித்துள்ளது.

அலரிமாளிகையில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்ட ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான முஜிபூர் ரஹ்மான் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

ஜனாதிபதிக்கு இல்லாத ஒரு அதிகாரத்தைச் சோடித்து இதனை செயற்படுத்த அவர்கள் முயன்றனர். ஆனால் மக்களால் நிராகரிக்கப்பட்டவர்களைக் கொண்டு உருவாக்கிய அரசை முன்நோக்கிக்கொண்டு செல்ல உயர் நீதிமன்றம் தடை விதித்தது. நாட்டு மக்களின் கண்களில் மண்ணைத் தூவி முன்னெடுக்கப்பட்ட இச்செயற்பாடு தடுக்கப்பட்டது.

ஜனாதிபதிக்கு இல்லாத ஒரு அதிகாரத்தை அவர் இருப்பதாக எண்ணிச் செயற்பட்டார். அதன் காரணமாகவே இதனை அரசமைப்புச் சூழ்ச்சி எனக் கூறுகின்றோம்.

ஜனாதிபதி சட்ட வல்லுநர் இல்லை. ஆகவே அவருக்கு இவ்வாறு ஆலோசனை வழங்கியது யார் என்பதைத் தேடிப் பார்க்க வேண்டும். ஆகவே ஜனாதிபதி ஆசனத்தில் அமர்ந்து கொண்டு இவ்வாறு சிறுபிள்ளை போல் செயற்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது - என்றார். (ஐ)

# நீதியரசர் ஈவா வனசுந்தர ஓய்வு

கொழும்பு, டிசெ. 15

நீதியரசர் ஈவா வனசுந்தர அம்மையார் நேற்றுடன் ஓய்வு பெற்றார்.

நான்கு தசாப்தகால நீதித்துறை சேவையிலிருந்து நீதியரசர் ஈவா வனசுந்தர நேற்று ஓய்வு பெற்றார் என நீதியரசர் புவனேக அலுவிஹார அறிவித்தார்.

அமைச்சரவை மீதான இடைக்காலத் தடையை எதிர்த்து மஹிந்த தரப்பு தாக்கல் செய்த மேன்முறையீட்டு மனு நேற்று உயர்நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டது.

நீதியரசர்களான ஈவா வனசுந்தர, புவனேக அலுவிஹார மற்றும் விஜித் மலல்கொட ஆகியோர் அந்த மனுவை விசாரித்தனர்.

நீதியரசர் ஈவா வனசுந்தர முன்னிலையான இறுதி வழக்கு விசாரணையாக இது அமைந்தது. (ஐ)

# மேன்முறையீட்டு நீதிமன்றின் பதில் தலைவராக துரைராஜா



கொழும்பு, டிசெ. 15

மேன்முறையீட்டு நீதிமன்ற பதில் தலைவராக, மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி எஸ்.துரைராஜா பதவிப் பிரமாணம் செய்துகொண்டார்.

அவர் நேற்று வெள்ளிக்கிழமை ஜனாதிபதி முன்னிலையில் தனது பதவியை பொறுப்பேற்றுக்கொண்டார். (ஐ)

# லேக் ஹவுஸ் மீதான தாக்குதல்; ஐக்கிய தேசியக் கட்சி கண்டனம்

கொழும்பு, டிசெ. 15

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டமைக்கு எதிரான உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை அடுத்து, லேக் ஹவுஸுக்கு முன்னால் அமைதியற்ற முறையில் சிலர் செயற்பட்டமைக்கு, ஐக்கிய தேசியக் கட்சி, தனது கண்டனத்தைத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில், ஐ.தே.கவின் உத்தியோகபூர்வ டுவிட்டர் கணக்கில் இடப்பட்டுள்ள பதிவிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இந்தச் சம்பவம் தொடர்பில் உரிய விசாரணைகளை மேற்கொண்டு, சம்பவத்துக்குப் பொறுப்பானவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் அந்தப் பதிவில் கூறப்பட்டுள்ளது. (ஐ)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.12.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.